1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது
Telegrams: "CATHOLIC PRESS", JAFFNA.
Telephone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

80-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1955-ம் ஆண்டு ஆடி மாதம் 14-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 27-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

பிற்பகல்முதல் இரவிரவாகக் கடுங் குளிர்காற்றுச் சுழல்காற்றாக வீசிக் கொண்டிருக்கிறது. பகலிலே கடூர வெயில்எறிக்கின்றது. நெடுநாள் மழை பெய்யாமையால் கிணறு, குளம்முதலாம் நீர்நிலையங்கள் வற்றிக்கொண்டு போகின்றன. "இன்புளுவென்சா" போன்ற மூன்றுநாட் குளிர்சுரம் தலைகாட்டியிருப்பதாலே பிள்ளைகளும், வளர்ந்தவர்களும் அத்தால் பாதிக்கப்பட்டுக் கஷ்டமுறுகின்றார்கள்.

### மேயரைநீக்கச் சதிமானம்

கொழும்புமேயர் டக்றர் என். எம். பெரேறாஅவர்களைப் பதவியிலிருந்து நீக்கிவிடுமாறு ஐக்கியதேசிய கட்சியுடன் கம்யூனிஸ்தகட்சிசேர்ந்து சதிமானஞ்செய்கிறதென்று லங்கா சமசமாஜ கட்சிப் பத்திரிகை குற்றஞ்சாட்டியிருக்கிறது. நகரசபை அங்கத்தவர்களில் ஒருவரான திரு. அந்தோனி மார்செலஸ் என்பவர் ஐக்கியதேசியகட்சியில் சேர்ந்தமைக்குச் சென்றமாதம் நடைபெற்ற கம்யூனிஸ்தகட்சி மகாநாட்டில் செய்யப்பட்ட ஓர்முடிவே காரணமென்று அப்பத்திரிகை தெரிவித்திருக்கிறது.

### வெங்காயத்தின்உத்தரவாதவிலை

உணவு–கமத்தொழில் மந்திரிகாரியாலயத்தின் நிரந்தரகாரியதரிசியான திரு. கே. அழ்வாப்பிள்ளை அவர்கள் சென்ற வியாழக்கிழமை யாழ்ப்பாண நகரமண்டபத்தில் நடந்தேறிய சர்வதேச கூட்டுறவுப்பெருநாள் கொண்டாட்டத்தில் பேசியவிடத்து: ஈரவெங்காயத்துக்கு அருளப்பட்டுள்ள உத்தரவாதவிலைத்திட்டம் அடுத்தவருடம் அகற்றப்பட்டு விடுமென்றும், உள்நாட்டு வெங்காயஉற்பத்தியை மேலும் ஊக்கப்படுத்தும் நோக்கமாக அரசாங்கம் பம்பாய்வெங்காயத்தின் இறக்குமதியைத்தடுக்க ஆலோசித்துவருகிறதென்றும் தெரிவித்திருக்கின்றார்.

### அனுராதபுரப் பட்டினசங்கம்

அனுராதபுரப்பட்டினமானது சனங்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளைக்கொண்ட ஓர்சங்கத்தைத திரும்பவும் கொண்டிருக்கப்போகிறது. முன்னர் இருந்துவந்த அனுராதபுரப் பட்டினசங்கம் இற்றைக்கு ஐந்துவருடங்களின்முன் தலதாபனமந்திரியாரால் கலைத்துவிடப் படலாயிற்று. அதற்குக்காரணம், பட்டினவரியிறுப்பாளர் செய்துகொண்ட மனுவின்பேரில் நடத்தப்பட்ட பகிரங்கவிசாரணையின் முடிபாகச் சங்கம் தகாதமுறையிலே பரிபாலனஞ் செய்யப்பெற்றதெனக் கண்டறியப்பட்டமையேயாகும். புதிய சங்கம் யு. சி. எனப்படும் ஓர்பட்டினசங்கமாய் இருக்கமாட்டாது. அனுராதபுரச் சங்கமெனவே அறியப்படும். சில மாற்றங்களுடன் வழமையானபட்டின சங்கங்களுக்குரிய பரிபாலன திட்டங்களைக் கொண்டிருக்கும்.

### நகரசபைப் புதியகம்மிஷனர்

காலி நகர்சபைக் கம்மிஷனரான திரு. ஏ. வி. சின்னையா அவர்கள் வருகிற ஆவணிமர்தம் 1-ந் திகதியன்று யாழ்ப்பாணநகரசபைக் கம்மிஷனராகக் கடமையாற்றவிருக்கின்றார். இவரிடமாக யாழ்ப்பாணநகரசபைக் கம்மிஷனரான திரு. கே. சண்முகம்அவர்கள் காலிநகரசபைக் கம்மிஷனராகப் பதவியேற்க விருக்கின்றார்.

### யாழ்ப்பாண மாம்பழங்கள்

யாழ்ப்பாண்முற்றவெளியிலே மாணிப்பாய் இந்துக்கல்லூரிக்காணிவல் மைதானத்திலே இந்தியாவில் முன்னைநாள் இலங்கை ஹைகம்மிஷனராயிருந்த திரு. சி. குமாரசாமிஅவர்கள் மாம்பழக்காட்சியைத் திறந்துவைத்துப் பேசியபோது: யாழ்ப்பாணமாம்பழங்கள் கீழைத்தேசங்களில் முதற்தரமானவையென்றும், கமத்தொழிற்பகுதியானது யாழ்ப்பாணத்திற்கிடைக்கும் பல்வேறு இனமான மாம்பழங்களையும் உலகின்மறுபகுதிகளில் பிரஸ்தாபப்படுத்த வேண்டுமென்றும், யாழ்ப்பாணத்திலே அதிகமான மாமரங்களை உற்பத்தி செய்யுமாறு மக்களிடையே கரிசனையை உண்டுபண்ண வேண்டுமென்றும் கூறலாயினர்.

### கொழும்புநகரும் அரிசியும்

அடுத்துநிகழும் ஆவணிமாதம் 1-ந் திகதி தொடக்கம் கொழும்புநகரசபை எல்லைக்குள் அடங்கியபகுதியிலே அரிசி நிறுத்துவிற்கப்பட விருக்கிறது. அங்கும், இலங்கைமுழுவதிலும் தற்போது அரிசி கொத்துக்கணக்கிலே அளந்து விற்கப்படுகிறது. ஒருகொத்து அரிசி இரண்டுறுத்தல்அரிசிக்குச் சமமாகும். ஆகவே, ஆவணிமாதம் 1-ந் திகதிதொடக்கம் ஒருமுழுக்கூப்பனுக்கு இரண்டு கொத்து அரிசிக்குப்பதில் நான்குறுத்தல்அரிசி வழங்கப்படும். கொழும்பு நகரசபை எல்லைக்குள் அடங்கியபகுதியில் பரீட்சார்த்தமாகவே முந்தமுந்த இந்தநிறுத்தல்முறை நடைமுறைக்கு வாவிருக்கின்றது. இது வெற்றியளித்தால் இலங்கை முழுவதுமே நடைமுறைக்குக் கொண்டுவரப்படும்.

### சாராய நஷ்டபரிகாரம்

புத்தஜயந்திக் கொண்டாட்ட காலத்திலும், பாராளுமன்ற பொதுத்தேர்தல் காலத்திலும் தங்கள் தவறணைகளை மூடும் போது சாராயக் குத்தகைகாரருக்கு நஷ்ட பரிகாரம் செய்யப்படவிருக்கிறது. அடுத்தவருட சாராயத்தவறணைகளின் குத்தகைவிற்பனவு நடைபெறுமுன் இதுவிஷயமாகச் சமீபத்திலே தம்மைக்கண்டுபேசிய குத்தகைகாரரின் பிரதிநிதிகள் கோஷ்டிக்கு உள்நாட்டுமந்திரியார் திரு. ஏ. இரத்நாயக அவர்கள் அவ்விதம் நஷ்டபரிகாரஞ் செய்வதாக உறுதிவாக்கு அளித்திருக்கின்றார். தற்போது சாராயவரி ஏற்றப்பட்டிருக்குங் காரணமாகப் போத்தலொன்றின்விலை இரண்டு ரூபாவால் அதிகரித்திருக்கிறது. அத்துடன் எவரும் இடையிலேதிறந்து தண்ணீர்கலந்து கள்ளஞ்செய்யவியலாத புதியபோத்தல்களில் சாராயம் அடைக்கப்படவிருப்பதால் போத்தலுக்கும் 50சதம் வரையில் கூடக்கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

### பிரதமரின் காணித்தானம்

குருநாகற்பிரிவிலே தமக்குச் சொந்தமான 200ஏக்கர் தென்னந்தோட்டம்ஒன்றைப் பிரதமர் சேர் கொத்தலாவலஅவர்கள் அங்கு காணியற்ற ஏழைமக்களுக்குப் பங்கிட்டுக்கொடுக்கும்படியாய் அரசாங்கத்திற்கு நன்கொடையளித்திருக்கின்றார். அதன் பேரிலேஅதனைக்கையேற்குமாறு குருநாகல் அரசாங்க ஏசன்றர் கேட்கப்பட்டிருக்கின்றார். சென்ற ஞாயிற்றுக் கிழமை நம்போதகலையில் நடைபெற்ற கூட்டுறவுவாரக் கொண்டாட்டத்திலே இதுசெய்தியைப் பிரதமர் வெளியிடலாயினர். அவர்இவ்வாறு நன்கொடையளிக்கக்காரணம் அப்பகுதியில் அரசாங்ககாணி அருந்தலாயிருப்பதேயாகும்.

### பல்கலைத் தொழிற்கல்லூரி

யாழ்ப்பாணத்திலே கொக்குவிலில் 4லட்சத்து 82ஆயிரம் ரூபாசெலவில் கனிஷ்ட பல்கலைத் தொழிற்கல்லூரி ஒன்றை அமைப்பதற்கான திட்டங்கள் யாவும் பூர்த்தியாகிவிட்டன. கொக்குவிலிலே பரமேஸ்வரக் கல்லூரிக்குச் சமீபமாக ஏழரை ஏக்கர் விஸ்தீரணமான காணிஒன்றில் இது அமைக்கப்படவிருக்கிறது. இதற்குச் செல்லும் செலவுவிபரங்களைப் பகிரங்க வேலைப் பகுதித்தலைவர் போக்குவரத்து – பகிரங்கவேலை மந்திரியாரது நிரந்தரகாரியதரிசியின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பித்திருக்கின்றார். கட்டடவேலைகளைக் கூடிய விரைவிலே பூர்த்திசெய்வதில் விசேஷகவனஞ் செலுத்தும்படி கல்வி மந்திரி காரியாலயம் பகிரங்கவேலைப் பகுதியைக் கேட்டிருக்கின்றது. நிகழும் வருடத்திலே நடைபெறும் கட்டடவேலைகளுக்குப் பதினாயிரம்ரூபா செலவுசெய்யப்பட விருக்கின்றது.

### கல்லூரி விளையாட்டுப்போட்டி

சம்பத்திரிசியார் கல்லூரிமாணவர்களின் வருடாந்த விளையாட்டுப்போட்டி சென்ற 9-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் கல்லூரி விளையாட்டு மைதானத்திலே வடமாகாண அரசாங்க உப அதிபர் திரு. டபிள்யு. பத்மநாதன் அவர்கள் தலைமையில் பரிமளிப்பாக நடந்தேறியது. வெற்றிபெற்றவர்களுக்கு அவர்பாரியார் பரிசில்களை வழங்கினார். கல்லூரிப் பழையமாணவர்களும, பெற்றோரும், மற்றும்பிரமுகர்களுமாகப் பெருந்தொகையானவர்கள் போட்டியின்போது சமுகமளித்திருந்தார்கள். முந்தக் கல்லூரி அதிபர் வண. என். அருள்நேசன் சுவாமியவர்கள் கல்லூரிக்கொடியை ஏற்றிவைத்தபோது, அனைவருமெழுந்துநின்று மரியாதை செலுத்தினர். அதன்மேல் பொஞ்ஜின், டன், ஏபிரகாம், மத்தியூஸ் எனும் நான்கு இல்லங்களுக்குமிடையே பல்வேறு விளையாட்டுப்போட்டிகள் ஆனந்த ஆர்ப்பரிப்புகள் மத்தியில் காம்பீரமாக நடைபெறலாயின. ஈற்றில், பொஞ்ஜின் இல்லம் முதலிடமும், மத்தியூஸ்இல்லம் இரண்டாமிடமும், ஏபிரகாம் இல்லம் மூன்றாமிடமும், டன்இல்லம் நான்காமிடமும் வகிக்கலாயின. கல்லூரி அதிபர் நிகழ்த்திய சொற்பொழிவின்பின் ஸ்ரீமதி பத்மநாதன் அவர்களால் பரிசில்கள்வழங்கப் பெற்றன. விளையாட்டுப்போட்டி இனிதே நிறைவாயிற்று.

### புதிய குருப்பிரசாதி

ரோமாபுரியிலே தமதுவேதசாஸ்திரப் படிப்புகளை முடித்துக்கொண்டு வண. எல். ஆர். அன்ரனிசுவாமியவர்கள் நிகழும்ஆடிமாதம் 18-ந்திகதி திங்கட்கிழமை கொழும்புவந்துசேரவிருக்கின்றார். இவர் ஊர்காவற்துறை, காம்பனிலுள்ள தமதுவிசாரணைப்பங்குக் கோவிலாகிய அர்ச். செபஸ்தியாரின் கோவிலிலே இம்மாதம் 23-ந் திகதி சனிக்கிழமைகாலை 7-15 மணிக்குத் தம்முடைய முதற் பூசையை நிறைவேற்றுவாரென அறிகின்றோம்.

### வண. லோங்சுவாமியார்

யாழ்ப்பாணம், சம்பத்திரிசியார் கல்லூரியின் முன்னைநாள் அதிபரான வண. ரி. எம். எவ். லோங்சுவாமியவர்கள் ஆஸ்திரேலியாவிலிருந்து சென்றசெவ்வாய்க்கிழமை கே. எல். எம். விமான மார்க்கமாகக் கொழும்புவந்து சேரலாயினர். தமதுகண்பார்வை குறைந்திருப்பதன்காரணமாகச் சிகிச்சை பெறும்பொருட்டே தாம்வந்திருப்பதாக அங்கேஅவர் தெரிவித்துக்கொண்டார். யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல கண்வைத்தியரான டக்றர் எஸ். சிவசுப்பிரமணியம் அவர்களைக்கொண்டு தமதுகண்களைப் பரிசோதித்து அவரிடம் சிகிச்சைபெறுதற்காகச் சுவாமியவர்கள் சென்றபுதன்கிழமை ஏயர் சிலோன்விமானத்தில் யாழ்ப்பாணம் வந்துசேரலாயினர். இம்மாதஇறுதிக்குள் அவர் ஆஸ்திரேலியாவுக்குத் திரும்புவாரெனத் தெரியவருகிறது.

### யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு

ஆண்டிலே இரண்டாம்முறையாக நடந்தேறும் யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு சென்ற 12-ந்திகதி செவ்வாய்க்கிழமை நகரமண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது. நீதியரசர் கிறேஷன் அவர்கள் விசாரணைநடத்தி வருகின்றார். இம்முறை விசாரணைக்குப் பாரப்படுத்தப்பட்டுள்ள வழக்குகள் 15. இவற்றிலே கொலைவழக்குகள் 10. முதலாவதாக ஊர்காவற்றுறைக் கொலைவழக்கு விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்டது.

### கூட்டுறவுவிழாப் பரிசளிப்பு

யாழ்ப்பாணக் கூட்டுறவுஇயக்கத்தின் வருடாந்தவிழா சென்ற7-ந்திகதி வியாழக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் யாழ்ப்பாண நகர மண்டபத்திலே உணவு-கமத்தொழில் மந்திரிகாரியாலய நிரந்தரகாரியதரிசியான திரு. கே. அழ்வாப்பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெறலாயிற்று. யாழ்ப்பாணக் குடாநாட்டின் பலபகுதிகளிலுமிருந்து பெருந்திரளான பிரமுகர்களும், பிறரும்வந்து அதிலே கலந்துகொண்டார்கள். செல்வி தம்பு, பி. ஏ. அவர்களும், திரு. எஸ். அருளம்பலம், ஜே. பி. அவர்களும், திரு. ஆர். செல்வரத்தினம் அவர்களும் விழாவிலே சொற்பொழிவாற்றினார்கள். விழாப்பேச்சுப்போட்டியில் முதலிடம்வகித்த மாணவியும், மாணவருமாகிய இருவரும் கூட்டுறவு பற்றிப் பேசினார்கள். இவர்களிலே தனதுபேச்சுத்திறமைக்காகச் சம்பத்திரிசியார் கல்லூரிமாணவரான செல்வன் எவ். ஏ. இராசநாயகம் ஓர் தங்கப்பதக்கம் பரிசாக வழங்கப்பெற்றனர். இவரைத் தொடர்ந்து இன்னுஞ்சிலர் பரிசுகள்பெற்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீணாகிறதே!

சிலுவையில் ஆண்டவர் தமது திருஇரத்தத்தைச்சிந்திப் பாவத்தின்ஆட்சியை விழுத்தாட்டி நெடுங்காலமாக உலகை அடிமைப்படுத்தியிருந்த பசாசைமுறியடித்தார். அந்தநேரத்தில் யேசுவின்திருஇரத்தம் பசாசையும், பாவத்தையும் ஜெயித்தது. அந்த இரத்தத்தினுல் தேவசெம்மறிப் புருவையானவர் மானிடசந்ததியை மீட்டுக் கடவுளுக்குக்கொடுத்தார்.

இன்னும் பாவத்தின்அடிமைத்தனத்தில் இருக்கும் ஆத்துமங்களுக்கு யேசுவின்திருஇரத்தமே மீட்புக்கிரயம். பாவிகளின் மனந்திரும்புதலுக்காக அல்லது தன்பாவங்களுக்குப் பரிகாரமாக ஒருவன் அந்தஇரத்தத்தை நித்தியபிதாவுக்கு ஒப்புக்கொடுக்கையில் பரமபிதா சந்தேகமற அவனுடைய மன்ருட்டுகளுக்குச்செவிகொடுக்கிருர். ஏனெனில், அந்தஇரத்தம் அவரது நேசகுமாரனுடையது அந்தக்குமாரன் "நம்முடையபாவங்களுக்கு மாத்திரமல்ல, சர்வலோக பாவங்களுக்கும் பிராயச்சித்தப்பலி" (1 அரு. 2:2). "மாசில்லாதபலியாகத் தம்மைத்தாமே சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்த கிறீஸ்துநாதருடையஇரத்தம் நம்முடைய மனச்சாட்சிகளைச் செத்த கிரியைகளினின்று சுத்திகரிக்கும்" (எபி. 9:14).

ஒருவன் எவ்வளவுபெரிய பாவியாயிருந்தாலும் என்பாடுகளேயும், என் மரணத்தையும் பரமபிதாவுக்கு ஒப்புக்கொடுப்பானுனல் அவன் மன்னிப்புப் பெறுவான்என ஆண்டவர் அர்ச். ஜெர்த்துருத்அம்மாளுக்கு அறிவித்திருக்கிருர். உயிரோடிருப்போருக்காகவும், மரித்தோருக்காகவும் ஆண்டவருடைய திருஇரத்தத்தை ஒவ்வொருநாளும் ஐம்பதுமுறை நித்தியபிதாவுக்கு ஒப்புக்கொடுத்துவந்த அர்ச். பாஸி மரியமதலேனம்மாளுக்கும் அதேசெய்தி ஆண்டவரால்அறிவிக்கப்பட்டது. "பாவிகளுக்காக நான் தேவரீருக்குச் செலுத்தியுள்ள பரிகாரத்தை நித்தியபிதாவுக்கு ஒப்புக்கொடுத்து, பாவத்தால் வரப்பிரசாதசீவியத்தை இழந்திருக்கும் சகலஆத்துமங்களுக்கும் அந்தத் திருஇரத்தப் பலன்களை அளிக்கும்படி அவரைக் கெஞ்சிமன்ருடு; அவர்கள் வரப்பிரசாதஉயிரைப்பெற்று என்னைநித்தியத்துக்கும் மகிமைப்படுத்துவார்கள்" என ஆண்டவர் அர்ச். மார்க்கரீத் மரியம்மாளுக்குத் தெரிவித்திருக்கிருர். "நித்தியபிதாவே! என்பாவங்களுக்குப் பரிகாரமாகவும், உத்தரிக்கிற ஆத்துமங்களுக்கு ஆறுதலாகவும், திருச்சபையின் அவசரங்களுக்காகவும் யேசுக்கிறீஸ்துநாதருடைய விலைமதியாத திருஇரத்தத்தை உமக்குஒப்புக்கொடுக்கிறேன்" என்னும் செபத்துக்குத் திருச்சபை 500 நாட்பலனை அளித்து இந்தநல்ல வழக்கத்தை அங்கீகரித்திருக்கிறது.

உலகின் சகலமனிதருக்காகவும் யேசு உயிர்விட்டார். அவருடைய திருஇரத்தம் எல்லோர்மேலும் தெளிக்கப்பட்டிருக்கிறது. அதன்பலனை மனிதர் அடையாமற்போனுல் அது அவர்களுடையகுற்றமே. அந்தத் திருஇரத்தம் அடைந்துகொடுத்துள்ள மன்னிப்பு வேண்டாமென்று அவர்கள் அதை நிராகரிக்கிருர்கள். பாவத்தை விலக்கவோ, புண்ணிய பாதையில் முன்னேறிச்செல்லவோ அந்தத் திருஇரத்தம் அவர்களுக்குப் பெற்றுக்கொடுத்துள்ள வரப்பிரசாதத்தை அவர்கள் புறக்கணிக்கையில் அந்த இரத்தத்தை வீணுக்குகிறுர்கள். நன்றிகெட்ட கன்னெஞ்சான அவர்கள் கடவுள் தங்களைநோக்கிநீட்டும் நேசத்தையும், நட்பையும் உதறித்தள்ளித் திருஇரத்தத்தைக் காலால் மிதிக்கின்றனர்.

நல்லகிறீஸ்துவர்கள் ஆண்டவருடைய திருஇரத்தத்தைச் சரிவரப் பயன்படுத்துவார்களானுல் நிர்ப்பாக்கிய பாவிகள்பலர் கடவுளிடம் வந்துசேர்வார்கள். ஒவ்வொருகிறீஸ்துவனும் வேதபோதகனுகி ஆத்துமங்களை யேசுவின் திருஇருதயத்தினண்டை கொண்டுவருவான். இது கடவுளுக்கு எத்தனைமகிமை! யேசுவின் திருஇருதயத்துக்குப் பெரும்ஆறுதல். பாவிகளுக்காக யேசு தம்முடையஇரத்தத்தைக் கடைசித்துளிவரை சிந்திஞர். பாவிகளின் மனந்திரும்புதலுக்காக உழைத்துச் செபித்தவர்களுக்கு ஒப்பற்றமகிமை மறுவுலகில் காத்திருக்கிறது. "அநேகரை நல்வழியில் திருப்பினவர்கள் நட்சத்திரங்களைப்போல் நித்தியத்துக்கும் பிரகாசிப்பார்கள்" (தானி. 12:3). "ஆத்துமங்களை இரட்சிப்பதில் கடவுளுடன் ஒத்துழைப்பது தெய்வீக அலுவல்களிலெல்லாம் மிகத் தெய்வீகமானது" என அர்ச். தியோனிஸியுஸ் கூறுகிருர்.

உன்னைப் பசாசின்கையினின்று மீட்டதினுல் கடவுள் உனக்குக் காண்பித்துள்ள அளவற்றநேசத்துக்கு நீ என்ன கைம்மாறு செலுத்தியிருக்கிருய்? நன்றிகெட்டஆத்துமங்களால புறக்கணிக்கப்படும் அந்தநித்திய நேசமானவர்மேல் உனக்குக்கடுகளவேனும் அனுதாபமிருந்தால், நாள்தோறும் காலையிலும்மாலையிலும், கூடுமானசந்தர்ப்பங்களிலும் பாவிகளுக்காகச் சிறுசிறு செபங்கள்பலவற்றைச் சொல்லிவருவாய். சாவானபாவத்தைத் தடுப்பதற்காக யேசுவின் திருஇரத்தத்தை மாசற்ற மரியாயின் கரங்கள் வழியாக

—: J. M. N. :—

நித்தியபிதாவுக்கு ஒப்புக்கொடுப்பது நல்லவழக்கமெனப் பேபர்சுவாமியார் சொல்லுகிருர். "ஓ, மாசற்றகன்னிகையே! இன்றுஉலகில் ஒருசாவான பாவமாவது தடுக்கப்படும்படி உமது திருக்குமாரனுடைய விலைமதிக்கப்படாத இரத்தத்தை நித்தியபிதாவுக்கு ஒப்புக்கொடுப்பீராக" என்னும் சிறுமன்ருட்டைப் பகல்நேரத்தில் சாவான பாவம் தடுக்கப்படும்படி காலையிலும், இரவுநேரத்தில் தடுக்கப்படும்படி மாலையிலும் சொல்லிவரலாம். கன்னிமரியம்மாள் வழியாய்க் கொடுக்கப்படும் இந்தக்காணிக்கை எப்படியாவது பலனளிக்கும். பத்தியுள்ளஒருவன் வருடந்தோறும் நூற்றுக்கணக்கான சாவானபாவங்களைத் தடுப்பான்.

பிரான்சியசேனையிலிருந்து ஒளிந்தோடியஒருவனைச் சுட்டுக்கொல்வதற்காகக் கைகளைக்கட்டி நடத்திச்சென்ருர்கள். கட்டைஅவிழ்க்கையில் அவனுடையகையிலிருந்து இரத்தம வந்துவிட்டது. "பிரான்சிய இரத்தம் வீணுகப்போகிறதே. ஐயோ!" என்று சேனுதிபதியான ஜோன் தார்க் கூச்சலிட்டார். இப்பொழுதோ மனிதர் மிருகங்களைப்போல்வாழ்ந்து, மிருகங்களைப்போல்செத்து, நாகத்திற்புதைக்கப்பட்டு யேசுவின் திருஇரத்தத்தை ஒவ்வொருநிமிஷமும் வீணுக்கிவருகிருர்கள். "கடவுளுடைய திருஇரத்தம் வீணுய்ப்போகிறதே. ஐயோ!" என்று எவராவது நினைக்கின்றனரா? "நித்தியபிதாவே! மரிக்கஇருப்போரின் பாவங்களுக்குப் பரிகாரமாக யேசுநாதருடைய திருஇரத்தத்தை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்" என்று நேரங்கிடைக்கும் போதெல்லாம் சொன்னுல் எத்தனைஆத்துமங்கள் நாகபாதாளத்தில்விழாது தப்பிப்பார்கள்!

ஆடிமாதம் திருஇரத்தத்தின்மாதம். இந்தமாதத்தில் ஒவ்வொருநாளும் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் இருசிறு மன்ருட்டுகளையும் அடிக்கடி சொல்லிவா. அப்படியானுல் நீசாகும் வரை இந்தநல்லவழக்கம் உன்னைவிட்டு அகலாது. உனக்காகவும், சகல மானிடருக்காகவும் கடைசித்துளிவரை தமதுஇரத்தத்தைச் சிந்தி...

# கடவுள் இருக்கிருர்

## கண்களாற்காணும் காட்சிகளிலிருந்து இதைஎப்படி மெய்ப்பிக்கலாம்?

சர்வேசுரன் பூரணமாயிருக்கிறவர். ஆகையால், அவர் எங்கும் இருக்கவேண்டியவர். அவர் ஓர்இடத்தில் இல்லாதிருப்பாரானுல் அது அவருக்கு ஓர்குறையாயிருக்கும். இந்தச்சத்தியத்தைப் படிப்பிக்கத்தான் சமதுவேதாகமம்: "ஆண்டவரே! தேவரீருடைய கண்ணுக்குத் தப்பித்துக்கொள்ளுகிறதற்காக நான் எங்கேபோவேன்? பரலோகத்தில் ஏறுவேனுகில் அங்குஇருக்கிறீர். பூமிபாதாளத்தில் இறங்குவேனுகில் அங்குஇருக்கிறீர். சமுத்திர எல்லைக்கப்பால் சேர்வேனுகில் தேவரீருடையகரமே என்னை அங்கேயும் கொண்டுபோகும்" என்று சொல்லுகின்றது.

சர்வேசுரன் எங்கும் இருக்கிருர் என்று சகலசமயத்தவர்களுமே படிப்பிக்கிருர்கள். ஆனுல், அவர்கள் அதனுல் கண்டுபிடிக்கிறதென்ன? வெளிச்சம், காற்று, ஆகாயம்முதலியன உலகமெங்கும் பரந்துஇருப்பது எவ்விதமோ அவ்விதமே சர்வேசுரன் எங்கும்பரந்து இருக்கிருரென்று கண்டுபிடிக்கிருர்கள். ஆனுல், இது முற்றுந்தப்பிதம். சர்வேசுரன் எவ்விடத்திலுமே இருக்கிறதுமன்றி எவ்விடத்திலுமே முழுமையாயுமிருக்கிருர். இதுஎப்படிஎன்பது நம்முடையபுத்திக்கு எட்டாவிட்டாலும் இதுசத்தியத்திலுஞ் சத்தியம். அவர் எங்கும்இருக்கிருர். அவர் இல்லாதஇடம் கிடையாது. ஓர்அஞ்ஞான சாஸ்திரியாகிய எப்பித்தேத் என்பவர் சாதுரியமாகச் சொன்னதுபோல: நீ இராத்திரிகாலத்தில் உன் அறையில் புகுந்து, அதன்கதவுகளைச் சாத்தியிருந்தும் அதில் நீ ஒன்றியாயிருக்கிருயென்று நினையாதே. உன்னுடன் சர்வேசுரன்இருக்கிருர்.

### சர்வேசுரனைச் சரீரக்கண்ணுலே பார்க்கமுடியாது

சர்வேசுரனுக்குச் சரீரம் ஒன்றும் இல்லாதபடியால் சரீரக்கண்ணுலே அவரைப்பார்க்கமுடியாது. மோட்சத்திலேமுதலாய் ஆத்தும ஞானஅறிவினுல் அவரைத் தரிசிப்போமேயன்றிச் சரீரக்கண்ணுல் அவரைக்காணவேமாட்டோம். சரீரக்கண்ணுல் காண்கிறதைவிட ஆத்தும ஞானஅறிவினுல் ஓர்காரியத்தை அறிவதுமேல். சர்வேசுரன் செய்துள்ள சிலஆச்சரியங்கள் நாம் நம்முடைய கண்களாற் காணுங்காட்சிபோல் தோன்றுகின்றன.

1-வது, நாம் வாசஞ்செய்யும் பூமியானது ஒருமகாபெரிய எலுமிச்சம் பழத்தைப்போல உருண்டையாயிருக்கிறது. அது அவ்வளவுபாரத்தையும், விஸ்தாரத்தையும் உடையதானுலும் அது ஒருஅஸ்திவாரத்தின்மேல் தாங்காமல் ஒருபுகைக்குண்டுபோல ஆகாயத்தில் ஊசலாடிக்கொண்டு சர்வேசுரன் அதற்குத் திட்டஞ்செய்தவழியில் அணுவளவும் பிசகாமல், இடைவிடாமல் சுற்றிக்கொண்டு வருகின்றது. அதேபிரகாரமாய்ச் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள்முதலிய கிரகங்களும் சர்வேசுரன் தங்கள்தங்களுக்குத் திட்டம்பண்ணினவழியிலே இடைவிடாமல், ஓர் அணுவும்பிசகாமல்தொடர்ந்து செல்லுகின்றன. எப்போதுதொடங்கி அவ்வாறு செல்லுகின்றன என்ருல் 20,00,000 அல்லது 40,00,000 வருடம்தொடங்கி — அதாவது அவர் அவைகளை உண்டாக்கியநாள் முதல் கொண்டு அப்படியே சென்றுவருகின்றன.

2-வது, பூமியின்சுற்றளவை அளந்து பார்த்தால், அதுஏறக்குறைய 2,50,000 மைல்என்று வானசாஸ்திரிகள்சொல்லுகிருர்கள். பூமி எவ்வளவு பெரிதாயிருந்தபோதிலும் அதை மற்றக் கிரகங்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்போது மிகவுஞ்சிறிதாகத் தோன்றும். உள்ளபடியே உறேனுஸ்என்று அழைக்கப்படும்கிரகம் பூமியைவிட 81மடங்கு பெரியது. சனிஎன்னுங்கிரகம் பூமியைவிட 974 மடங்குபெரியது. ஜூப்பிற்றர்என்னும் மற்றொருகிரகம் பூமியைவிட 1,470 மடங்குபெரிது நம்முடையகண்களுக்குத் தென்படும் நட்சத்திரங்களுக்குள்ளே அதிகஞ்சிறியது பூமியைவிடத 9,00,000 மடங்குபெரியது. பூமியைவிடச் சூரியன் 14,00,000 மடங்குபெரியது இப்படியிருக்கப் பூமியையும், சூரியனையும் ஒப்பிட்டுப்பார்த்தால் பூமி ஒருசிறு கூடுபோல இருக்கும். பூமியையும், மற்ற உலகங்களின் கூட்டத்தையும் ஒப்பிட்டுப்பார்த்தால் பூமி ஒருசிறுமணல்மணிபோலத் தோன்றும.

3-வது, சர்வேசுரன் ஒன்றுமில்லாமையில்நின்று ஒரேவார்த்தையில் அவ்வளவுபெரிய உலகங்களை உண்டாக்கியதையிட்டு, அவருடைய அளவில்லாத வல்லபத்தைக்கண்டு அதிசயப்படவேண்டுமென்ருலும் அவர் அவைகளை நடத்திக்கொண்டுவருகிற வல்லபத்தைப் பார்த்துத்தான் அதிகமாக அதிசயப்படவேண்டும். சிற்சிலஉதாரணங்களைச் சொல்லிக்காட்டுவோம்.

உறேனுஸ்என்ற கிரகம் ஒருமணிநேரத்துக்குள் 16,740 மைல் செல்லுகின்றது. இந்தவேகம் எவ்வளவென்று நிதானிக்க வேண்டுமானுல், ஐரோப்பாவிலே ஓரோர்சமயத்தில் புகைவண்டிகள் ஒருமணிநேரத்தில் 60 மைல்வீதமாகப் போகுமென்ருலும் அதைவிட உறேனுஸ்என்றகிரகம 285 மடங்கு அதிவேகமாய்ச் செல்லுமென்று அறிந்துகொள்ளவேண்டும். வெள்ளிஎன்றகிரகம் ஒருமணிநேரத்தில் 87,000 மைல் செல்லும். இந்தவேகம் எப்படிப்பட்டதென்ருல் பீரங்கிக்குண்டானது மகாவேகமாய்ச் சென்றபோதிலும் வெள்ளியானது அதைவிட 146 மடங்கு அதிகவேகமுடையது. புதன் என்றகிரகம் வெள்ளியைப்பார்க்கிலும் இரட்டிப்பான வேகமுடையது.

அந்தஉலகங்கள் அவ்வளவுபெரியனவாயும், ஓட்டத்திலே அவ்வளவுவேகம் உடையவைகளாயும், கணக்கிலேஅடங்காதனவாயும் இருந்தபோதிலும், அவைகள் உண்டான நாள்முதற்கொண்டு தங்கள்வழியில் ஒருநிமிஷநேரமாகிலும் முந்தியாகிலும், பிந்தியாகிலும் சென்றதில்லை. இதை யோசித்துப்பார்க்கும பட்சத்தில் சர்வேசுரனுடைய வல்லபத்தையும், அறிவையும் என்னவென்று சொல்லுவோம்?

4-வது, நட்சத்திரங்கள் எத்தனை? கண்ணுக்குத்தென்படுகிற நட்சத்திரங்கள் 4,00,000. பூதக்கண்ணுடியால் பார்க்கக்கூடிய நட்சத்திரங்களோ பலலட்சம். அதுவுமன்றி எவ்விதத்திலும் காணப்படாத வேறுஅநேக நட்சத்திரங்களும் உண்டு.

ஒவ்வொருநட்சத்திரமும் நம்முடைய சூரியனைப்போல் பெரிதான ஒருசூரியனென்றும், நம்முடையசூரியனைச் சூழவரப் பற்பலகிரகங்கள் இடைவிடாது சுழன்றுசெல்வது எவ்விதமோ, அவ்விதமே ஒவ்வொருநட்சத்திரத்தையும் சூழவரப் பற்பலகிரகங்கள் சுழன்று செல்கின்றனவென்றும், நம்முடைய உலகமண்டலத்தில் எவ்வளவுஅதிசயமான ஒழுங்குஇருக்கிறதோ, அவ்வளவு ஒழுங்கு ஒவ்வொருநட்சத்திரமண்டலத்திலும் இருக்குமென்றிருக்கையில் அவ்வளவுபெரிதான அத்தனை உலகாதிஉலகங்களை ஒருவார்த்தையால் உண்டாக்கிக் காப்பாற்றிப் பிசகுஒன்றுமில்லாது நடத்திவருகிற கடவுளின்வல்லபத்தை எவ்வளவென்று சொல்லுவோம்? (வளரும்)

யேசுவின் திருஇருதயம் உனக்கு ஏராளமான சமாதானத்தையளிக்கும். (ஞானதூதன்)

ஆசிரியர், N. M. சிங்கராசா, கரவெட்டி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### சிலுவைவணக்கத்தின் ஆரம்பம்

கிறீஸ்துநாதர் சிலுவையில் அறையுண்டு உயிர்விடுத்துப் பதினைந்து ஆண்டுகள் செல்லாமுன்னர்தானே ஜெருசலேமிலிருந்த கிறீஸ்துவகல்லறைகளிலே சிலுவையானது வணங்கப்பட்டுவந்த ஓர்திருச்சின்னமாய் இருந்துவரலாயிற்றென்று அதிகஞ்சமீபகாலத்தில் நடந்தேறியுள்ள புதைபொருள் ஆராய்ச்சிகளின்போது கண்டெடுக்கப்பட்ட பொருட்களைப்பற்றி ஆராய்ந்து எழுதுகையில் பிரான்சிய லுவார்நகரின் நூதனபொருட்காட்சிச் சாலையினதும், நூல்நிலயத்தினதும் பரிபாலனர் பரீஸ்நகரில் பிரசுரமாகும் வாரவெளியீடொன்றிலே குறிப்பிட்டிருக்கின்றார். அங்கு கி. பி. 42—3 ஆண்டிலே ஆட்சிசெய்த முதலாம ஏரோது அகிறிப்பா அரசனின் காலத்தில் பாவனையிலிருந்த ஓர் நாணயம் மற்றோர்சான்றாகும். "யேசுக் கிறீஸ்து, இராசா" என்றுபொருள்தரும் "I X B" என்ற பின்னல்எழுத்தும் ஏரோதியனின் காலத்தைச் சேர்ந்ததாகும். சமீபகால புதைபொருள் ஆராய்ச்சியிலே கண்டெடுக்கப்பட்ட இவைகள் மிகமுக்கியமானவைகளென்று ஜெருசலேமில் பிரசுரமாகும் தொமினிக்குவின் சபை ஆராய்ச்சி வெளியீடு ஒன்று தெரிவித்திருக்கிறது.

### சர்வாதிகாரிகளின் அநீதசெயல்

யூகோசிலேவியாவின் சர்வாதிகாரியான மாஷல் ரிற்றோ அந்நாட்டின் சிவில்உத்தியோகஸ்தர்களான 750 பேரை அரசாங்கசேவையிலிருந்து தள்ளப்பட விருப்பவர்களின் இடாப்பு ஒன்றிலே சேர்த்துவிட்டிருக்கின்றார். இவர்கள் அரசியலிற் கலந்துகொள்ளாது தங்கள்கடமைகளை மனச்சாட்சிப்படியே செய்துவந்தார்கள். ஆனால், இவர்கள் கத்தோலிக்கர். அதனால் கம்யூனிஸத்திலே தங்களுக்கு அனுதாபம் இல்லையென்பதை இவர்கள மறைக்கவில்லை. ஆதலால், தங்கள் சமயத்தை முன்னிட்டு இவர்கள் தங்கள்உயர்ந்த உத்தியோகபதவிகளை இழந்து போனார்கள். இவர்களினஸ்தானங்களை அந்நாட்டுச் சேனையின் அளவைக்குறைக்க மாஷல் ரிற்றோ செய்துள்ள தீர்மானத்தின்பேரிலே பட்டாளங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட கம்யூனிஸ்த அதிகாரிகள் வகிக்கவிருக்கின்றார்கள். இனனும் வேதானுசாரமுள்ளகத்தோலிக்கரையும், தங்கள் மனைவியர்களையும், பிள்ளைகளையும் வேதானுசாரமுள்ள கத்தோலிக்கராகக் கொண்டுள்ளவர்களையம், தங்கள்குடும்பத்தில் ஓர்குருவானவரையோ, கன்னியாஸ்திரியையோ, சந்நியாசியையோ கொண்டுள்ளவர்களையும், மேல்நாடுகளில் சஞ்சரிக்கின்ற சுற்றத்தவர்களைக் கொண்டுள்ளவர்களையும், யூகோசிலேவியாவிலே ஓர்காலம் ஆட்சிசெய்த முதலாளித்துவ குடும்பங்களைச்சேர்ந்தவர்களையும், பிறநாடுகளிலுள்ள கத்தோலிக்ககல்லூரிகள், அல்லது சர்வகலாசாலைகளில் கல்விபயின்றவர்களையும், கம்யூனிஸத்தை விருத்திசெய்வதிலே கரிசனையெடாதவர்களையும், கம்யூனிஸ்த தத்துவத்தை விளங்கிக்கொள்ளப்போதிய அறிவாற்றல் அற்றவர்களையும் உத்தியோக பதவிகள், தொழில்களிலிருந்து தள்ளிவிடுமாறு அரசாங்கபகுதிகளுக்கும், தேசீய கைத்தொழில்களைத் தலைமைவகித்து நடத்தும் ஸ்தாபனங்களுக்கும் கட்டளை பிறந்திருக்கிறது.

### விமானியின் பெரியபொக்ஷம்

தனது சுயநாட்டிலே ஜெற் ஆகாயவிமானம் ஒன்றைச் செலுத்திச்சென்ற முதலாவது லெபானியரான 26 வயதுடைய யோசெவ் லெற்றுயெவ்வென்பவர் தற்போது இங்கிலாந்திலே குளொஸ்றர்ஷயரிலுள்ள றோயல்விமானப்படையிலே ஓர்ஆசிரிய விமானியாகப் பயிற்சிபெற்று வருகின்றார். இவர் ஆகாயவிமானத்தில் பறந்து செல்லும்போது சணலாற்செய்த மதித்தற்கரிய ஓர்பொக்ஷமாகச் சின்னஞ்சிறிய பை ஒன்றைத் தன்னோடு எப்போதுமே கொண்டுசெல்லுகின்றார். நமது திவ்விய கர்த்தரது திரு அங்கியின் ஓர் சிறுதுண்டும், அவர் அறையுண்ட திருச்சிலுவையின் ஒருசிறுதுண்டும் அதனுள்வைத்துத் தைக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் தனதுபாட்டியாரால் தனக்குக் கொடுக்கப்பட்டனவென்றும், அவைகள் உண்மையான துண்டுகளேயென்று வத்திக்கான் உறுதிப்படுத்தியிருக்கிறதென்றும் இவர் கூறுகின்றார். இவருடைய சகோதரர்கள் நால்வர் குருமாராய் இருக்கின்றனர். இவர் தந்தையார் லெபனன்நாட்டின் வடபகுதியிலுள்ள பாற்காநகரின் மேயராகவிருக்கின்றார்.

### கம்யூனிஸத்தின் அஸ்தமனம்

ஓர்காலம் ருஷ்யாவுக்கு வெளியேயுள்ள எந்தஒருநாட்டிலும் இல்லாதவிதமாய் இத்தாலியிலே அத்துணைபலம் பொருந்தியதாய் இருந்துவந்த கம்யூனிஸ்த கட்சியானது தற்போது கலைகுறைந்து, பலங்குன்றியதாய் அஸ்தமனகாலத்தை அண்மிக்கொண்டிருக்கின்றது. இற்றைக்குப் பத்து வருடங்களின்முன் தொகிளியற்றி என்ற தலைவனின்கீழ் அங்கு மிக்கபலம்பொருந்தியதாய்க் காணப்பட்ட கம்யூனிஸம் அரசாங்கத்தையே கைப்பற்றிவிடுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆயின், அதற்குள் கத்தோலிக்கஎழுச்சி தோன்றியது. அதனைத் தடுத்துக் கத்தோலிக்க மக்களாலே ஏதோ அற்புதவிதமாக எழுப்பப்பட்ட மகாப்பலம்பொருந்திய அணைச்சுவரைக் கம்யூனிஸம் எதிர்கொள்ளவேண்டியநிலைமை ஏற்பட்டது. அந்த எழுச்சியே அதன் முன்னேற்றத்துக்கு முதன்முதலாக முற்றுப்புள்ளியிட்டது. பின்னர் அதனைக் கொண்டுபோய் இளைத்த நிலைமையிலே ஓர்மூலையில் ஒதுக்கிவிட்டது. இந்த நிலைமையிலே இத்தாலிய கம்யூனிஸ்தர்களிடையே பிளவுகள் ஏற்பட்டன. அதன்விளைவாக அதிலிருந்து பலர்விலகினர். இராசினாமாச் செய்தனர். மனந்திரும்பிக் கத்தோலிக்கராயினர். இவர்களிலே கூட்டங்கூட்டமான தொழிலாளர்கள் மாத்திரமல்ல, பாராளுமன்ற அங்கத்தவர்களும், அந்தந்த ஸ்தலதலைவர்களும் அடங்குவார்கள். இதிலிருந்து மிலான், தூறின், ரூன்ரோ, றோம், நேப்பிள்ஸ். முதலாம் பெரிய கைத்தொழில் நகரங்களிலெல்லாம் பெருந்தொகையான வாக்காளர்களை இழந்து கம்யூனிஸம் பெருந்தோல்வியடையலாயிற்று.

### கைலஞ்சம் வாங்குவாரில்லை

செஞ்சீனாவிலே செக்கியாங் மாகாணத்தின் பெரியநகரங்களில் கம்யூனிஸ்த அதிகாரிகள் தாங்கள்வகுத்திருக்கும் கிறீஸ்துவ பிரிவினைச் சபையாகிய "சுதந்திர கிறீஸ்துவசபை" யை வளர்த்து நிமிர்த்திவிடுமாறு ஓர் புதிய திருவிளையாடலை நடத்திவருகின்றனர். ஆனால், சீனக் கத்தோலிக்கரோ அவர்களின் தந்திரத்தில் எடுபடுகிறவர்களாயில்லை. கத்தோலிக்கர் தங்கள் ஸ்தாபனங்களை அந்தச்சுதந்திர கிறீஸ்துவசபையின் ஓர் பகுதியாக ஆக்கிவிடுவதற்கு முன்வந்தால் பணஉதவிகளும், நன்கொடைகளும அருளுவதாகக் கம்யூனிஸ்த அதிகாரிகள் வாக்களிக்கின்றார்கள். பணக்கஷ்டம் மிகவதிகமாய் இருந்தபோதிலும் அவர்களின் பண உதவியைக் கத்தோலிக்கர் நாடுவோராயில்லை.

### ஆர்ஜென்ரீனியருக்காகப் பிரார்த்தனை

வேதகலாபனைக்குள்ளாய் வாடிவருந்தும் ஆர்ஜென்ரீன் நாட்டுத் திருச்சபைக்காகவும், கத்தோலிக்கருக்காகவும் நமது திவ்வியகர்த்தரின் 60 அடிஉயரமான திருச்சுரூபத்தின் முன்பாக மன்றாடிக்கொள்ளுமாறு சமீபத்திலே ஆயிரக்கணக்கான மெக்சிக்கஇளைஞர்கள் வளைந்து வளைந்து செல்லும் எட்டுமைல் தூரத்தைத்தாண்டி அங்குள்ள கியுபிலெற்றிகுன் றின்உச்சிக்கு யாத்திரைசெய்தார்கள். வேறும் ஆயிரக்கணக்கானோர் குவாடலூப்நாயகியின் மகாலயத்துக்கு யாத்திரைபோய் அதேகருத்துக்காக மன்றாடிக்கொண்டார்கள். மெக்சிக்கோவிலே கத்தோலிக்க சேவை ஸ்தாபகமான 25-ம் ஆண்டுநிறைவுவிழாக் கொண்டாட்டத்தின் ஓர்பகுதியாகவே முன்சொன்ன இருயாத்திரைகளும் நடைபெறலாயின.

### பசுற்றோமக்களின் அப்போஸ்தலர்

ஆபிரிக்காவைச்சேர்ந்த பசுற்றோலாந்திலே இன்றுதிருச்சபை பிரமிக்கத்தகுந்தவகையில் செழித்தோங்கி வளர்கின்றது. அங்ஙனம் வளர்ச்சியடைந்துவரும் திருச்சபையை அங்கே அடியிட்டவர் பசுற்றோமக்களின் அப்போஸ்தலரெனக் கொண்டாடப்படுகின்றவரும், அமலோற்பவ மரியநாயகிசபைக் குரவருமான வண. யோசெவ் ஜெரூட் எனும் பரிசுத்தகுருவானவரே. இவர் 1831-ம் ஆண்டு பங்குனி மாதம் 13-ந் திகதி பிரான்ஸ் தேசத்திலே நான்சிமேற்றிராசனத்தைச்சேர்ந்த ஓர் சிறுகிராமத்தில் பிறந்து, அம்மேற்றிராசன குருமடத்தில் படித்து, 1851-ம் ஆண்டு அமலோற்பவ மரியநாயகிசபையில் சேர்ந்து கொண்டார். பின்னர் ஓர் தியாக்கோனாக இருக்கும் போதே தென்னாபிரிக்காவிலுள்ள நத்தால்நாட்டுக்கு ஓர் மிஷனரியாக அனுப்பப்பெற்று எட்டு மாதகாலப் பெருங்கஷ்ட பிரயாணத்தின்பின் அங்கு போய்ச் சேர்ந்து ஒருமாதத்தின்பின் குருப்பட்டம் பெற்றார். அதன் மேல் பத்துவருடகாலம் சூலு சாதிமக்களிடையே சுவிசேஷம் போதித்துவந்தபின் பசுற்றோமக்களின் விக்கார் அப்போஸ்தலிக்குவாக அனுப்பப்பெற்று அவர்கள் மத்தியில் ஐம்பது வருடகாலம் சஞ்சரித்து, எண்ணிறந்தமக்களைக் கிறீஸ்துநாதரின் திருமந்தையில்சேர்த்து, பரிசுத்தம்பரிமளிக்கும் தமதுபுனித வாழ்க்கையாலும், சகலர்க்குமே தமதுபிறர்சிநேகதொண்டுகளாலும எல்லோராலுமே நேசிக்கவும், சங்கிக்கவும்பெற்றிருந்து கடைசியாகத் தமது 84-ம்வயதிலே 1914-ம்ஆண்டு நித்திய பேரின்ப சம்பாவனைக்கு அழைக்கப்படலாயினர். இந்தப் பரிசுத்த அமலோற்பவிசபைக் குருவானவருக்கு மூத்திப்பேறுபெற்றபட்டம் சூட்டுவிப்பதற்கான விசாரணையைத்தொடக்கிப் பரிசுத்தபாப்பரசர் சென்ற பங்குனிமாதம 1-ந்திகதியன்று அதிகாரம் அளித்திருக்கின்றார். அமலோற்பவ மரியநாயகி சபைக் குருபரித்தியாகிகளில் இத்திருப்பட்டஞ் சூட்டுதற்கான விசாரணை தொடக்கப்பெற்றுள்ள இரண்டாவது தேவதொண்டர்இவராவர். இவருக்கு முன் கனடாவிலே சென்அல் பேட்நகர் மேற்றிராணியாராக விளங்கியிருந்த ஆசா. வைற்றல் ஜஸ்ரின் கிரூன்டின்மேற்றிராணியாருக்கு இத்திருப்பட்டஞ் சூட்டுதற்கானவிசாரணை 1937-ம் ஆண்டு மாசிமாதம் 4-ந்திகதியன்று பதினொராம்பத்திநாதபாப்பானவரது அதிகாரத்தின் பேரிலே தொடக்கப்படலாயிற்று.

---

● இன்றுஉலகமுழுவதிலும் ஏறக்குறைய 3 லட்சத்து 60 ஆயிரம்குருமார் இருந்துவருவதாக — அதாவது ஒவ்வொரு 1,270 கத்தோலிக்கருக்கு ஓர்குருவானவர்வீதம் இருந்துவருவதாக ஜேர்மனியிலே பிறேய்போர்க்நகரில் பிரசுரமாகும் "ஹெர்டர் கொறெஸ்போன்டென்ஸ்" எனும் கத்தோலிக்கசஞ்சிகை மதிப்பிட்டுக் கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடி மாதம்

பொதுக் கருத்து: முதியோர்களின் ஞானக்கல்விக்காக வேண்டிக்கொள்வது.

மிஷன் கருத்து: மிஷன் நாடுகளிலே இல்லறவாசிகள் அப்போஸ்தல தொண்டுக்குத் தயாரிக்கப்படுமாறு மன்றாடிக்கொள்வது.

சத்தியவேத
பாதுகாவலன்
1955-ம் ஆண்டு
ஆடிமாதம் 14-ந் திகதி

## சற்பிரசாத மகாநாடு

தென்னமெரிக்காவின் மிகப்பெரிய குடியரசுநாடான பிறேசில்நாட்டின் தலைப்பட்டணமாகிய றியோ டி ஜனீறோ எனும் நகரமானது அடுத்தவாரத்திலே—அதாவது நிகழும் ஆடிமாதம் 17-ந்திகதி ஞாயிறுமுதல் 24-ந் திகதி ஞாயிறுவரையிலுள்ள ஒருவார காலத்திலே தன்னகத்துப் பக்திப்பரவசமாக—பெரும் பிரஸ்தாபமாக நடைபெறவிருக்கின்ற மாபெரும் வேதசம்பவம்ஒன்றாலே கத்தோலிக்க உலகமுழுவதையும் ஈர்த்துகொள்ள விருக்கின்றது. அந்தமாட்சிமைவாய்ந்த சம்பவந்தான் யாது? அங்கு பிரஸ்தாபமாக நடந்தேறவிருக்கின்ற 36-வது சர்வதேச சற்பிரசாத மகாநாடேயென்க. சுமார் இருபதுகருதினல்மாரும், பன்னூற்றுக்கணக்கான அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார்களும், பத்துலட்சம் கத்தோலிக்க மக்களும் அதிலே கலந்துகொள்ள விருக்கின்றார்கள். மகாநாடு நடந்தேறும் அட்டதினங்களிலும் அப்பட்டணமானது அளிக்கவிருக்கும் ஞானாடம்பரகாட்சியோ சாற்றுந்தரமன்று. றியோ டி ஜனீறோவிலுள்ள குவானபரக்குடாவானது உலகின் மகாஅழகுவாய்ந்த குடாக்கடல்களில்ஒன்றாகும். பாப்பரசரின்பிரதிநிதியான கருதினல் ஆண்டவரைவரவேற்று இந்தக் குடாக்கடலில்நடக்கும் வள்ளங்களின்பாரிய ஊர்வலமானது மிக விசேஷப்பட்ட ஓர்வைபவமாகவிருக்கும். மகாநாட்டின் போது மகோன்னதகாட்சி அளிக்கவிருக்கும் மற்றோர்விசேஷம்யாதெனில், றியோ டி ஜனீறோநகருக்கு மேலாகத்தோன்றும் கொர்கோவாடோஎனும் குன்றின்மீது நிறுவப்பெற்றுள்ள கிறீஸ்துநாதரின் பிரமாண்டமான திருச்சுரூபமேயாம். தென்னமெரிக்காவிலே ஆர்ஜென்ரீனா - சிலி எனும் நாடுகளின் எல்லையிலே இருந்துவருகின்ற பிரமாண்டமான திருச்சுரூபம் "அந்தீஸ் மலைகளின் கிறீஸ்துநாதர்" என்று அழைக்கப்படுகின்றது. ஆனால், இந்தச்சுரூபம் "இரட்சகரான கிறீஸ்துநாதர்" என அறியப்படவிருக்கின்றது. அந்நகரின் சரிமத்தியதானத்திலே சுமார் 2,000 அடி உயரமான கொர்கோவாடோகுன்றுக்குமுடிசூட்டியவாறாகத்திகழும் இச்சுரூபமானது 165 அடி உயரமுடையது. கங்கிறீற்கலவைகொண்டு செய்யப்பட்டது. நேரேஇருபக்கமுமாக நீட்டியபடியேயுள்ள இதனகைகள் ஒரு அந்தமுதல் மறுஅந்தம் வரையில் 92 அடி நீளமுடையன. துளையுண்ட கரம்ஒவ்வொன்றும் 10 அடிக்கு மேல் நீளமும், 10தொன் நிறையுமுடையது. கலக்கமுற்றுவிளங்கு சிரசு 13½ அடி உயரமும், 30 தொன் நிறையுமுள்ளது. பகலிலே சூரியஒளியில் பளிங்குபோலும் சுத்தவெண்மையும், இரவிலே ஒளிவெள்ளக்கதிரில் பிரபையுமுள்ளதான இந்தச் சுரூபம் சமுத்திரத்திலே 50 மைல் தூரத்துக்குக் காணக்கூடியதாயிருக்கும். மகாநாட்டுக்கு யாத்திரிகர்களை ஏற்றிச் செல்லும் இருபதுக்குமேற்பட்ட பாரிய பிரயாணக் கப்பல்கள் குவானபரக்குடாவிலே நங்கூரமிட்டுநின்று மகாநாடுமுடிகிறவரை அவர்களுக்கெல்லாம் மிதக்கும் விடுதிச் சாலைகளாய் இருந்துவரும். நிற்க, சர்வதேச சற்பிரசாத மகாநாடாகிய இது கத்தோலிக்க உலகமுழுவதுக்குமே பொதுவானதொன்றாகும். அதனால் நாம் எல்லோருமே அதிற் கலந்துகொள்ளவேண்டும். நேர்முகமாக அதற்குச் சமுகமளிக்க முடியாதிருப்பவர்கள் ஞானவிதமாக அதற்குச் சமுகமளித்து, எமதுநற்கருணைநாதரான யேசுதேவஇராசாவுக்குத்தோத்திரமாகவும், பதில் அன்பு, நன்றி, பரிகாரம் செலுத்துமுகமாகவும் பத்துலட்சம் பேருக்குமேற்பட ஒன்றுகூடிப் பிரசித்த ஆராதனை வழிபாடுகள் நடாத்தவிருக்கின்ற நமது ஞானச் சகோதரர்களுடன் மனத்தினால் நாமும் சேர்ந்துகொள்வோமாக! கத்தோலிக்க பிறேசில்நாட்டிலுமே கம்யூனிஸம் தலைவிரித்தாடிக்கொண்டிருக்கிறது. அதிலிருந்து அந்நாட்டைப் பாதுகாத்துவைக்கும்படியாகவும் இந்தவேளை ஆர்வத்துடன் மன்றாடிக்கொள்வோமாக!

## 20–25 ஆண்டுகளின்முன்

பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவில் விசாரணைப் பங்கிலே குடும்பசெபமாலைப் பக்தி இயக்கத்தின் நான்காவது வாரமும், சந்தியோகுமையோர்கோவில் விசாரணைப் பங்கிலே அவ்வியக்கத்தின் முதல் வாரமும் இதுவாகும். சென்ற ஞாயிற்றுக்கிழமை சாயந்தரம் ஆசனக்கோவில் விசாரணைப் பங்கு இயக்கத்தின் தலைவரும், உபதலைவரும், வகுக்கப்பட்ட இருபதுபகுதிகளினதும் பகுதித் தலைவர்களும், உதவித்தலைவர்களும் கட்டளைக்குரவர் சமூகமாகச் சென் சாள்ஸ் கலாசாலை மண்டபத்தில்கூடிக் குடும்பசெபமாலைப்பக்தியை அனுசரிப்பதாக வாக்களிக்கும் குடும்பங்களைப் பதிவுசெய்தற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்களென அறிகின்றோம். ஆசனக்கோவில் விசாரணைப்பங்கிலே குடும்பசெபமாலைப் பக்தி இயக்கத்திற்கான அருமுயற்சிகள் உச்சநிலை அடைந்துகொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்திலே நாம்அறியவந்த கருமம்ஒன்றை ஈண்டு எடுத்துக்கூறுவது நலமாகுமெனநம்புகின்றோம். அதாவது இந்தஅருமையான இயக்கம் இற்றைக்கு 20, 25 வருடங்களின்முன் தொடக்கப்பட்டிருந்தால் இன்னும்எத்தனையோ பாக்கியமான குடும்பங்களை—எத்தனையோ புனித இளைஞர்கள், இளம்பெண்களை யாழ்ப்பாணமேற்றிராசனம் கண்டிருக்குமாம். எத்தனையோகுடும்பங்கள் கெட்டழிந்துபோகாது காப்பாற்றப்பட்டுக்கடைத்தேறியிருக்குமாம். "குடும்பசெபமாலை குடும்பங்களைக் காக்கும்; குடும்பங்கள் சேமமுற்றால் உலகமும் சேமமுறும்" என்பதே குடும்பசெபமாலை இயக்கத்தின் குறிக்கோள்என்பதை எல்லோரும் மனதில்வைத்து, குடும்பங்களைப் பாதுகாப்போமாக! குடும்பங்களைச் சேமமுறச்செய்து, அதன் மூலம் உலகமே சேமமுறச் செய்வோமாக! "பிரிய தத்தத்தினாலே பூரணமரியாயே வாழ்க, கர்த்தர்உம்முடனே, ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள்நீரே" என்று மீண்டும் மீண்டும் நாம்சொல்லும்போது நமதுதேவஅன்னையின இருதயத்திலே மங்களவார்த்தைகேட்டபோது அவர்பெற்ற ஆனந்தத்தைப் புதுப்பிக்கிறோமென்பதையும், "இப்பொழுதும், எங்கள் மரணநேரத்திலும் வேண்டிக்கொள்ளும்" மென்று சொல்லும்போது, வரப்பிரசாதங்களின் மத்தியட்சகியானவரிடம் இருசந்தர்ப்பங்களை எடுத்துக்காட்டி மன்றாடுகிறோமென்பதையும் மறவாதிருப்போமாக!

நிற்க, நம்முடைய ஆசனக்கோவிலிலே பெரிதும் மனோற்சாகத்துடன் நடைபெற்றுவரும் குடும்பசெபமாலைப் பக்திஇயக்கமானது நமதுமேற்றிராசனத்தின் பல்வேறுவிசாரணைப்பங்குகளிலும் மிகுந்த அருட்சியை உண்டுபண்ணிக்கொண்டு வருகிறதெனவும், அதனால் அவற்றிலே இந்தநல்லஇயக்கம் அதிகாரபூர்வமாகத் தொடக்கப்படாதிருந்தும்பரக்கத்தொடங்கியிருக்கிறதெனவும் அறிவது சந்தோஷமே. குடும்பசெபமாலைப் பக்திஓங்குக! இப்புனிதஇயக்கம் குடும்பங்கள்தோறும் ஓங்கி வளருக!

### பங்குகளும் குருமாணவரும்

இங்கிலாந்திலே நொட்டிங்காம் மேற்றிராசனத்தில் ஆயிரம்பேருக்கு மேற்பட்ட கத்தோலிக்கரைக்கொண்டுள்ள விசாரணைப்பங்குகள் ஒவ்வொன்றும் குறைந்தபட்சம் வருடம்ஒன்றுக்கு 100 பவுண்சேர்த்துக் கொடுத்து ஓர் குருவானவரைப் படிப்பிப்பதற்குப் பொறுப்பாயிருக்க வேண்டுமென்று சிலகாலத்தின்முன் கேட்கப்படலாயின. இந்த வேண்டுகோளின்பேரிலே அங்குள்ள 24 விசாரணைப்பங்குகள் அவ்வாறு பணஞ்சேகரித்துக் கொடுக்கமுன்வரலாயின. டேர்பியைச்சேர்ந்த ஆர்ச். சூசையப்பரின் விசாரணைப்பங்கு 307 பவுண் சேகரித்துக்கொடுத்துள்ளது. இன்னும் அங்குள்ள கத்தோலிக்க முகாமைக்காரர் - தொழில்முதலாளிகளின் சங்கமானது குருவானவர்ஒருவர் சமூக சாஸ்திரத்திலே "டிப்ளோமா" அல்லது பட்டம்பெறுவதற்குவேண்டிய செலவைப் பொறுக்க முன்வந்துள்ளது.



நமது மேற்றிராணியாராகிய மகாவந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவர் அவர்கள் திருநாமங்கொண்ட பெருநாள் நிகழும் ஆடிமாதம் 20-ந்திகதியாகிய வருகிறபுதன்கிழமை வருகின்றதென்பதை அவரது ஞானமக்கள் அனைவருக்கும் ஞாபகமூட்டுகின்றோம். அன்றுதினம் சகலரும்—விசேஷமாகப் பாடசாலைப்பிள்ளைகளும் அவரது கருத்துகள் அனுகூலமாகும்படியாகப் பக்திபற்றுதலுடன் மன்றாடிகொள்வார்களாக! இன்னும் நமதுமேற்றிராசனத்திலே குடும்பசெபமாலை இயக்கத்தில் ஆண்டவர் அவர்கள் எத்துணை பெரும்ஆர்வம் கொண்டுள்ளார் என்பதை எல்லோருமே நன்கறிவார்கள். அவர்கொண்டுள்ள இந்தஆசை இனிதேபூர்த்தியாகித் திடகாத்திரத்துடனும், தீர்க்காயுசுடனும், சிறந்த ஞானத்துடனும் அவர் தமது ஞானமந்தையைச் சிறப்பாக ஆண்டுவரத்தக்கதாகத் தெரியலான திருவருட்பிரசாதங்களையெல்லாம் மழைபோல அவர்மேல் பொழிந்தருளுமாறு இறைவன் திருவடிகளை இரந்துகொள்ளுகிறோம்.

## பொதுவர்த்தமானம்

### அணுக்குண்டு யுத்தம்வந்தால்

"அணுக்குண்டுயுத்தத்தால் விளையக்கூடிய பேராபத்துகளை எடுத்துக்காட்டி உலகப்பிரசித்திபெற்ற விஞ்ஞானியாகிய டக்றர்அல்பேட் ஈன்ஸ்ரீன் அவர்களும், மற்றும்பிரபல ஏழு விஞ்ஞானிகளும் கைச்சாத்திட்ட எச்சரிக்கைஒன்றை உலகிலுள்ள பலம்வாய்ந்த சகல அரசாங்கங்களினதும் கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன்" என்று தற்போது 82 வயதுடைய பிரபல பிரித்தானிய தத்துவஞானியான திரு. பெட்றம் றஸல்அவர்கள் சென்ற 9-ந்திகதியன்று லண்டன் நகரிலே மாபெரும் பத்திரிகைநிருபர்கள் கூட்டமொன்றில்கூறி, அணுக்குண்டுயுத்தம்பற்றிய உலகவிஞ்ஞானிகளின் பிரகடனத்தை வெளியிட்டார். உலகப்புகழ்வாய்ந்த விஞ்ஞானியான அல்பேட் ஈன்ஸ்ரீன்அவர்கள் கடந்த சித்திரை 18-ந்திகதி காலஞ்செல்லுமுன் கைச்சாத்திட்ட இப்பிரகடனத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது: "மிகப்பயங்கரமான சிக்கலினால் மீளமுடியாத ஒருபிரச்சினையை நாங்கள் உங்கள்முன் சமர்ப்பிக்கிறோம். நாங்கள் மானிடவர்க்கத்திற்கே ஒருமுடிவைத் தேடப்போகிறோமா? அல்லதுமனிதவர்க்கம் யுத்தத்தை ஒதுக்கிவைத்துவிட்டு வாழுமா? இனிஏற்படப்போகும் யுத்தம்எதிலும் அணுக்குண்டுஆயுதங்கள் நிச்சயமாகப் பாவிக்கப்படும்என்பதையும், அது மனிதவர்க்கம் மேலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்வாழ்வதைப் பாதிக்குமென்பதையும் கவனிக்கும்போது உலகமகாயுத்தத்தினால் தங்கள்நோக்கங்களை நிறைவேற்றமுடியாதென்பதை உலக அரசாங்கங்கள் அனைத்தும்உணர்ந்து பகிரங்கமாக இதனைஒப்புக்கொள்ள வேண்டுமென்று நாம்வற்புறுத்துகிறோம். ஆகவே, எல்லாத்தகராறுகளையும் சமாதானமுறையில் அவைகள் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் வற்புறுத்துகிறோம். மனிதவர்க்கத்தினர் என்றமுறையிலே மனிதவர்க்கத்திற்கு நாம்வேண்டுகோள் விடுக்கிறோம். உங்கள்மனிதகுலத்தை ஞாபகத்தில் இருத்தி ஏனையவற்றை மறந்துவிடுங்கள். நீங்கள் அவ்விதம்செய்தால் ஒருபுதிய சுவர்க்கத்திற்கு வழிவகுத்தவர்களாவீர்கள். அன்றேல், சர்வஉலக நாசம்தான் உங்களை எதிர்நோக்கி இருக்கிறது" என்பதே. டக்றர்ஈன்ஸ்ரீனின் விஞ்ஞான அறிவே அணிக்குண்டுகளை உற்பத்திசெய்ய மூலகாரணமாயிருந்தது. ஜெனிவா நகரில் நான்குவல்லரசுகள் மகாநாடு நடைபெறவிருக்கும் தருவாயிலே அவர் உலகசமாதானத்தைப்பற்றித் தெரிவித்துள்ள கருத்துகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. அவர்கூறிய கருத்துகள் இதுவரை பரமஇரகசியமாக வைக்கப்பட்டிருந்தன.

### பெரோனுக்கு மகிமைப்பட்டங்கள்

ஆர்ஜென்ரீனாவின் ஜனாதிபதியான ஜுவான் பெரோன் தனதுநாட்டிலே திருச்சபையைவிரோதித்து, அதன்உரிமைகளைச் சட்டமூலம் அநீதியாகஅபகரித்து வேதகலாபனை நடத்திவந்த செய்தியாலே ரூஷியபூர்வகிறிஸ்துவ பிரிவினைச்சபை பெருமகிழ்ச்சிகொண்டதாய், அவருக்குச் "சம்பேதுரு – சம்பாவிலுவின் மகிமைவரிசை"ப் பட்டமளித்து அவரைக் கௌரவிக்கலாயிற்று. அதனைத்தொடர்ந்து மற்றோர் பிரிவினைச்சபையும் "திருக்கல்லறையின் மகிமைவரிசை"ப் பட்டஞ்சன்மானித்து அவரைப் பெருமைப்படுத்தலாயிற்று. கி. பி. 312-ம்ஆண்டு கொன்ஸ்ரன்ரீன்சக்கிரவர்த்தியால் ஆக்கப்பட்டதாக நம்பப்படுகின்ற பிந்திய மகிமைவரிசையானது அப்போஸ்தலிக்க பிரிவினைச்சபையின் சினட்சங்கத்தின் சிபாரிசின்பேரிலே குறைந்தபட்சம் பன்னிருவருக்கே வழங்கப்படுகிறது. இந்தப்பிரிவினைச்சபையின் தலைவர் ஜெருசலேமின் பிரிவினைச்சபைப் பத்திறியாக்குவே. இந்தவரிசைக்குரிய கழுத்துப்பட்டிகையை விசேஷதூதுவர்ஒருவர் கொண்டுசென்று ஜனாதிபதி பெரோனுக்கு வழங்கலாயினர்.

### மரணமே சிறந்ததுஎன்கிறார்

"கம்யூனிஸ்த ஆட்சியின்கீழ் வாழ்வதைக்காட்டிலும் சாதலே நல்லது" என்று முன்னர் கோறியயுத்தம் முடிந்ததும் செஞ்சீனாவிலே தங்கவிரும்பிய மூன்று அமெரிக்க யுத்தகைதிகள் தங்கள் தாய் நாட்டுக்குத் திரும்பும் வழியிலே சென்ற 10-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை ஹொங்கோங்தீவில் கூறிச்சென்றனர். லூவிஸ் கிறிக்ஸ், ஏதோபெல், வில்லியம் எகோவாட் ஆகிய இம்மூவரும் அன்றுதினம் செஞ்சீன எல்லையைக்கடந்து ஹொங்கோங் தீவு போய்ச் சேரலாயினர். "ஓர்முட்டாளான படியால்தான் செஞ்சீனாவில் நான் தங்கவிரும்பினேன்" என்று கிறிக்ஸ் கூறினார். கம்யூனிஸ்தர்களிடமிருந்து விடுதலையடைவதற்காகத் "தற்கொலைசெய்யப் போகிறேன்" என்று அச்சுறுத்திக்கூறிக்கொண்டு தான் ஒருசிறுகத்தியால் தன்சரீரத்தில் வெட்டிக்காண்பித்ததாகவும் அவர் தெரிவித்துக்கொண்டார். கம்யூனிஸ்த வாழ்வைவிட மரணமே சிறந்ததென்றால் அந்தவாழ்வு எப்படிப்பட்டதாய் இருக்குமோ? சிலவேளை நாகவாழ்வாய் இருக்கும்போலும்.

காதுக்குக் கேட்கும்
மிகமிக இன்பமான ஒலி,
புகழ் மொழிதான்.

# குடும்ப செபமாலையும் பரிசுத்த பாப்பரசரும்



"…. விசேஷமாய்க் குடும்பங்களின் மத்தியில் பரிசுத்த செபமாலை செபிக்கும் வழக்கம் எல்லா இடங்களிலும் கைக்கொள்ளப்பட்டு, வேத வைராக்கியத்துடன் காப்பாற்றப்பட்டுக் கூடிய பத்திவிநயத்துடன் செபிக்கப்பட வேண்டுமென ஆசிக்கிறோம். மனித சமுதாயத்தின் அஸ்திவாரமாகிய குடும்பத்தைச் சுவிசேஷ மார்க்கத்துக்குத் திருப்புவதிற் கரிசனையெடாது, அரசியல் வாழ்க்கையின் தடுமாற்றங்களை நிவர்த்தி செய்ய முயலுவது வியர்த்தம். இப்பாரிய கடமையைச் சித்திபெறச் செய்வதற்கு நாம் திட்டமாய்ச் சிபாரிசு செய்யக் கூடியது செபமாலைப் பத்தி.

மாலைப்பொழுதில் தினந்த வேலை முடிந்ததும் கிறீஸ்துவ குடும்பத்தினர் தேவதாயின் திருச்சுரூபத்தின் முன் ஒன்றாய்க்குழுமிச் செபமாலை ஓதுவது—பரலோக இராக்கினியின்புகழ் மேன்மேலும் அவர்கள் இல்லத்தில் பிரதிபலிக்கக் கேட்பது ஆ! என்ன மனோகர காட்சி! தேவனுக்கு எத்துணை விருப்பமான முயற்சி!! குடும்ப செபமாலை குடும்பத்து அங்கத்தவர் இருதயங்களை ஒன்றாய்இணைக்கின்றது. சமூகமாயிராதவர்களையும், மரித்துப்போனவர்களையும் ஒன்று சேர்க்கின்றது. இனிய அன்பால் குடும்பத்தினர் அனைவரையும் தேவகன்னியின்—தாயின் இருதயத்துடன் பந்திக்கின்றது."

(பரிசுத்தபிதா 12-ம் பத்திநாதர்)

# பாப்பரசரும் பண்டிதநேருவும்

பரிசுத்தபாப்பரசர் சென்ற 8-ந்திகதி வெள்ளிக்கிழமையன்று அதிகாரபூர்வமான பேட்டிஒன்றிலே இந்தியபிரதமர் பண்டிதநேருஅவர்களை வரவேற்றாரென்றும், பிந்தஅவருக்குத் தமது ஆளுகையின் ஞாபகசின்ன பதக்கம் ஒன்றை அன்புடன் சன்மானித்தாரென்றும் வத்திக்கான்நகரிலிருந்து தந்திச்சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. பாப்பரசர் வத்திக்கான் மாளிகையின் இரண்டாவதுமாடியிலே தமது அதிகாரபூர்வமான மாடத்தின் பிரத்தியேக நூல்நிலையத்திலே பண்டிதநேருஅவர்களுடன் சம்பாஷித்தார்.

ஆடம்பரமாகப் பலவிதவர்ணங்களிலே ஆடைகள்அணிந்திருந்த பாப்பரசரின் பரிவாரப்படையினர் இருமருங்கும்நின்று மரியாதைசெய்யும் புராதனவைபவங்களுடன் பண்டிதநேருஅவர்கள் பாப்பரசர்சமூகத்துக்கு அழைத்துச்செல்லப் பெற்றார். முதலில் பண்டிதநேருமட்டும் அவரிடம் அழைத்துச்செல்லப்பெற்றார். பேட்டிக்கென்று நேருவும், அவர் புதல்வியும், இந்திய அரசாங்க வெளிநாட்டு வியவகாரப்பகுதிக் காரியதரிசி ஜென்றல் திரு. என். ஆர். பிள்ளை அவர்களும் பாப்பரசர்மாளிகை சென்றனர்.

இத்தாலிய வெளிநாட்டுவியவகார காரியாலயத்தைச்சேர்ந்த கார்கள் அவரையும், அவர்புதல்வியான திருமதி இந்திராகாந்தியையும், அவர்பரிவாரத்தினரையும் அவர்கள் தங்கியிருந்த விடுதியிலிருந்து ரோமைநகரினூடாக வத்திக்கானுக்கு ஏற்றிச் சென்றன. பண்டிதநேருவுக்குப் பாப்பரசர் அளித்தபேட்டி 20 நிமிஷங்கள்வரை நீடித்திருந்தது. பாப்பரசரது நூல்நிலையத்திலே பண்டிதநேரு அறிமுகஞ்செய்யப்பெற்று அவருடன் சம்பாஷித்துக்கொண்டிருக்கையிலே அவர் புதல்வியும், பரிவாரத்தினரும் முன்மண்டபத்திலே பாப்பரசர் பரிவாரத்தினருடன் சம்பாஷித்துக்கொண்டிருந்தனர். பண்டிதநேரு பேட்டி பெற்றபின் அவர்கள் பாப்பரசர்சமூகத்துக்கு அழைத்துக்கொண்டு போகப்பெற்று, அவருக்கு அறிமுகஞ்செய்து வைக்கப்பட்டு, அவரைப் பேட்டிகண்டனர்.

அதன்மேல் பண்டிதநேரு பாப்பரசின் இராச்சிய பதிற்காரியதரிசியான மொன்சிஞ்ஞோர் தொமினிக் கோதார்டினி அவர்களைச் சந்தித்துவிட்டு வத்திக்கான் நூதனபொருட்காட்சிச் சாலையைத் தரிசித்தார். இதற்குமுன் இந்திய உதவிஜனாதிபதி டக்றர் ராதாகிருஷ்ணன் அவர்கள் பாப்பரசரின் பேட்டிபெற்றிருக்கின்றார். திருமதி இந்திராகாந்தி சித்திரகொத்து வேலைப்பாடமைந்த ஓர் தந்தப்பேழையைப் பாப்பரசருக்கு அன்பளிப்பாக வழங்கினார். பாப்பரசர் அதைஏற்றுப் பரிசில்களின் அறையிலே அதனைவைக்கும்படி உத்தரவிட்டு, இந்திராகாந்திக்குத் தமது ஆளுகையின் ஞாபக சின்ன பதக்கம்ஒன்றைச் சன்மானித்தார்.

பரிசுத்தபாப்பரசர் பண்டிதநேருவையும், அவர் கோஷ்டியினரையும் வரவேற்றுப்பேசியபோது: "தலைசிறந்த இராசதந்திரியும், ஆற்றல்மிக்க பிரதமமந்திரியுமான தங்களை முதன்முறையாகச் சந்திப்பதிலே மட்டற்றமகிழ்ச்சியடைகிறோம். உலகசமாதானமென்ற உயர்ந்தஇலட்சியத்திற்காகஉளமுவந்து பாடுபடுகின்ற தங்களை மனமாரப் பாராட்டுகிறோம். தங்களது இந்த இலட்சியம் கைகூடும்படியாக நமது நல்லாசியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்" எனக்கூறினின்றார்.

## நாளு சங்கதிகள்

● சோவியற்ரூஷியாவிலே அநேக வருடங்களாகக் கிறீஸ்துசமயத்தை எதிர்த்துக் கொடிய வேதகலாபனை நடத்தப்பட்டு வந்தபோதிலும் அங்கே குறைந்தபட்சம் 7 கோடிகிறீஸ்தவர்களும், கூடியபட்சம் 10 கோடிகிறீஸ்துவர்களும் இருப்பதாக நியூயோக்நகரிலுள்ள போர்டாம்சர்வகலாசாலையிலே ரூஷியநிலையத்தைச் சேர்ந்த வண. போல் டிக்கின்சன்சுவாமியார் கூறுகின்றார்.

● 1950-ம்ஆண்டு சீனக்கம்யூனிஸ்த அதிகாரிகள் கமச்செய்கைக்கென்று கிராமவாசிகளுக்குக் கொடுத்த சிறுதுண்டுக்காணிகளைத் திரும்பக் கைப்பற்றிக்கொண்டு, கூட்டுக்கமமாகிய சோவியற்திட்டத்தைப் புகுத்திவருகிறார்கள். இந்தத்திட்டத்தின்கீழ் காணி அரசாங்கத்துக்குச் சொந்தமானது. கிராமவாசிகளால் வேலைகொள்ளப்பட வேண்டியது.

● 1947-ம் ஆண்டுமுதல் சோவியற் அரசின் ஆதிக்கத்திலுள்ள கம்யூனிஸ்த கிழக்கு ஜேர்மனியிலிருந்து சகலவிதமான கலாசாலைகளையுஞ் சேர்ந்த சுமார் 75,000 ஆசிரியர்கள் வெளியேறிச் சுதந்திர மேற்குஜேர்மனிபோய்ச் சேர்ந்திருக்கின்றார்கள். இவர்களின் இடங்களைச் சமாளிக்கும்விஷயமாய்க் கம்யூனிஸ்த அதிகாரிகள் பெரும்அளவிலே தாராதரப்பத்திரமற்ற ஆசிரியர்களையே நியமித்திருக்கிறார்கள்.

● கம்யூனிஸ்த கிழக்குஜேர்மனியிலிருந்து இவ்வாண்டின் தைமாசத்தில் 14,300 பேரும், மாசியில் 12,500 பேரும், பங்குனியில் 15,700 பேரும், சித்திரையில் 18,000 பேரும், வைகாசியில் 21,846 பேரும் வெளியேறிச் சுதந்திர மேற்குஜேர்மனியிற்போய்க் குடியேறியிருக்கின்றார்கள். சென்ற வருடத்திலே அங்கிருந்து வெளியேறியவர்கள் 1,84,000 பேர். அதாவது மாதம்ஒன்றுக்குச் சராசரியாகப் 15,000 பேருக்குமேலாகும்.

● சென்றமாதம் 20-ந் திகதி உண்டான பூரண சூரியகிரகணம் பிலிப்பைன்ஸ்நாட்டின் தலைப்பட்டணமாகிய மனிலாநகரில் ஏழுநிமிஷநேரம் நீடித்திருந்தது. அதனால் எங்கும் ஒரே இருளாயிருந்தது. வீதிகளிலே வாகனங்கள் விளக்குகளுடன் சென்றுகொண்டிருந்தன. பிலிப்பைன் ஜனாதிபதிஉட்பட இருபதுலட்சம் மக்கள் நடுப்பகலில் தங்கள்வேலைகளை நிறுத்திவிட்டுச் சூரியகிரகணத்தை அவதானித்தார்கள்.

● பம்பாய்நகர் அதிமேற்றிராணியாரான கருதினால் கிருசியாஸ்ஆண்டவர் லண்டன்நகரிலே கருதினால் கிறிவ்வின்ஆண்டவரின் விருந்தினராய்இருந்தபின் சென்றவியாழக்கிழமை ஜேர்மனிக்குச்சென்று ஆச்சென் நகரிலுள்ள ஜேர்மன்கத்தோலிக்க மிஷனரிய தலைமைஸ்தானத்துக்கு விஜயஞ்செய்து இந்தியமாணவர்களையும் கண்டு பேசினாரெனச் செய்திகிடைத்திருக்கிறது.

● அமெரிக்க ஐக்கியதேச மசாசுசெற்சைச்சேர்ந்த மில்பறிஎனும் கிராமத்தில் 1846-ம் ஆண்டு ஐந்துசதமாக வாங்கப்பெற்ற தபால்முத்திரை ஒன்று சென்ற புதன்கிழமை லண்டன் நகர வர்த்தகர்ஒருவர்மூலமாக ஆஸ்திறேலியர் ஒருவருக்கு 1,500 பவுணுக விற்கப்படலாயிற்று.


● இந்தோசீனாவிலே சுதந்திர வியெற்னாமின் கத்தோலிக்க பிரதமரான திரு. ரிகோ டின் டியெம் அவர்கள் அந்நாட்டின்பிரதமராக நியமனம் பெற்ற முதலாம்ஆண்டு நிறைவுவிழா சென்ற வியாழக்கிழமை வந்தபோது அவருக்குச் சோபனவாழ்த்துக் கூறுவதற்காகச் சைகோன்நகரின் மத்தியிலே பிரமாண்டமான ஓர் சனசமுத்திரம் கூடியதாகத் தந்திச்சமாச்சாரங் கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலர் பக்கம்

## எங்கள் இலங்கை



— 'ஜெயம்' —

பொன்சொரியும் பூமியடா எங்கள் இலங்கை — தங்கப்
புதையல்களின் இதயமடா எங்கள் இலங்கை
மின்னொளிரும் மலைவளநா டெங்கள் இலங்கை — புகழ்
மேவியொளி வீசுதடா எங்கள் இலங்கை

●

மணிவயிரம் கனியுதடா எங்கள் இலங்கை — அன்பு
மழைநிதமும் பொழியுதடா எங்கள் இலங்கை
பணிபலவின் உறைவிடமாம் எங்கள் இலங்கை — முத்துப்
பவளமெலாம் உமிழுதடா எங்கள் இலங்கை

●

கலைமலரும் நிலையமடா எங்கள் இலங்கை — செந்நெற்
கழனிகளின் விளைநிலமாம் எங்கள் இலங்கை
அலைகடலின் நடுமணியாம் எங்கள் இலங்கை — வெள்ளி
அருவிகளின் உதயமடா எங்கள் இங்கை

●

தேயிலையின் சுரங்கமடா எங்கள் இலங்கை — இளந்
தென்னைபனைக் களஞ்சியமாம் எங்கள் இலங்கை
ஆயிரமாய்ப் பயனுதவும் எங்கள் இலங்கை — ஞான
ஆலயங்கொள் சோலையடா எங்கள் இலங்கை

## அண்ணா சொல்வது :

அருமைச் சகோதரங்களே !

வாலிபரே சமுதாயத்தின் சாரம். ஆகையால்தான் ஜேர்மனியில் ஹிற்லரும், இத்தாலியில் முசோலினியும், ருஷியாவிலும் அதன் ஆதிக்கத்தில் அடங்கியநாடுகளிலும் அவற்றின் தலைவர்களும் இளைஞர்கள்மேல் அதிககவனஞ் செலுத்தினர்கள்.

இளைஞர்களில் ஒருஆவல் உண்டு. திறமையாக ஏதோஒரு அலுவலை நிறைவேற்றித் தங்களையும், தங்கள் செயலையும் என்றும் அழியாத ஞாபகத்தில் இருத்தவேண்டுமென்பதே அவர்களிடமுள்ள அந்த அவாவாகும்.

தங்களுக்கு முன்னிருந்தவர்கள் நிறைவேற்றிய கருமங்களையும், கண்டுபிடித்தபுதிர்களையும், அவைகளால்உலகத்திலுண்டான மாற்றங்களையும் அறிந்து தாங்களும் அப்படிச்செய்ய வேண்டுமென்று அவர்கள் ஆவல் கொள்ளுகின்றனர். ஆரம்பத்தில் அவர்களது இலட்சியம் தெளிவா யிருப்பதில்லை. காலஞ் செல்லச் செல்ல அது தெளிவாகிறது. அதை நிறைவேற்றுவதே அவர்களின் எண்ணமும், கனவும்.

கனவென்றுதான் கூறவேண்டும். எந்தஇளைஞனும் தன் சீவியத்தின் ஓர்பகுதியில் கனவுலகத்திலேயே (இலட்சிய உலகத்திலேயே) சீவிக்கிறான். அவனுடைய ஆவலும் கனவுலகிலேயே சேர்ந்து விடுகின்றது. இது கற்பனையாக மாத்திரம் நிலைபெறுகிறதா? இல்லை. கனவு நனவாகிறது. கற்பனை உண்மையாகிறது.

கற்பனை உலகத்தில் கட்டிய கோட்டைகள் இடிந்துபோக வேண்டியதில்லை. கோட்டைகள் கட்டவேண்டியது அவ்விடந்தான். அவைகள் நிலைகொள்வதற்கு ஒருஅத்திவாரமே தேவையாகின்றது.

திருச்சபை இலட்சியஇளைஞர்களை அதிகந்தேடுகிறது. நரதேவனாகிய கிறீஸ்துவே நமது இலட்சியம். கிறீஸ்து உங்கள் இலட்சியமாயிருந்தால், உலகத்தில் எவ்வளவு உத்தாரணம் இருக்கும்.

சுபம் !

உங்கள் அன்புள்ள
அண்ணா.

## என்னைக்கெடுத்த லூயிஸ்

பிரான்ஸ்தேசத்திலே ஓர்சிற்றூரில் விக்றர்என்னும் ஓர்சிறுவன் இருந்தான். அவன் பக்தியுள்ள பிள்ளை. மகா புத்திசாலி. அவனுடைய நற்குண நற்செயல்களை அந்தஊரார் கண்டு மகிழ்வதுண்டு. ஆரம்ப கல்வி முடித்தபின் அவன் உயர்தர கல்வி கற்பதற்காகப் பரீஸ்நகர கலாசாலை ஒன்றில் உட்பிள்ளையாகச் சேர்ந்துகொண்டான். உட்பிள்ளைகள் விடுதியில் லூயிஸ் என்னும் ஓர்துஷ்டனும் இருந்தான். அவன் எப்படியோ விக்றருடன் சிநேகஞ்செய்து கொண்டதுமன்றித் தனது தோழர்களான கெட்ட பிள்ளைகள் சிலரையும் அவனுடன் தோழமை கொள்ளப் பழக்கிவிட்டான். அவர்களின் கூட்டுறவும், சம்பாஷணையும் விக்றருக்குத் தொடக்கத்தில் அருவருப்பாகத்தான் இருந்தது. ஆயினும் முகப்பிரீதியின் நிமித்தம் தனது வெறுப்பை வெளியிடாமல் அவர்களுடன் கலந்து கூடி மகிழ்ந்து பேசுவான். கலாசாலை அதிகாரிகளுக்குத் தெரியாமல் லூயிஸ் இரவில் எழுந்து போய்ச் சினிமா பார்த்துவிட்டு விடியுமுன் திரும்பிவந்து மகாயோக்கியன் போல் தனது கட்டிலில்படுத்து உறங்குவான். ஒருநாள் அவனுடைய புதிய சிநேகிதன் விக்றரையும் தொந்தரவு செய்து அழைத்தான். விக்றர் முதலில் போகச் சம்மதியாத போதிலும் முகத்தாட்சணியத்தின் நிமித்தம் பின்னர் சம்மதித்தான். அன்று இரவு லூயிஸனும், விக்றரும் விடுதியை விட்டுப் புறப்பட்டுச் சினிமாச் சாலைக்குள் நுழைந்தனர். நூதனமான பலபடங்களைப் பார்த்ததும் விக்றருக்குச் சினிமாக் காட்சியிலே ஆசைபிறந்தது. மற்றொருநாள் இருவரும் சினிமாச் சாலைக்குப் போகும்வழியிலே ஓர் மதுபானக் கடைக்குப் போய் வெறிக்கக் குடித்தனர். பின்னர் லூயிஸ் அதிலும் பெரிய பாவத்துக்கு ஏதுவான இடத்துக்கு விக்றரை அழைத்துக் கொண்டுபோய் அவனைப் பாவத்தில் விழச்செய்தான். இதனை அறியவந்த கலாசாலை அதிகாரிகள் இருவரையும் கலாசாலையை விட்டுத் துரத்திவிட்டார்கள். லூயிஸ் தன்ஊருக்குப் போய்விட்டான். விக்றர் தனதுஊருக்குத் திரும்பிப்போக வெட்கப்பட்டு என்ன செய்வதென்று அறியாமல் இங்குமங்கும் அலைந்துதிரிந்து பரீஸ்நகரிலேயே பிச்சை எடுத்துத் தன்வயிற்றை நிரப்பி வந்தான்.

விக்றர் கலாசாலையிலிருந்து வெளியேற்றப் பட்டான் என்பதை அறியவந்ததும் அவன்தந்தை பரீஸ்நகர் சென்று மகனைத் தேடிப் பார்த்துக் கடைசியாக ஓர்வீட்டுத் திண்ணையில் கடுஞ்சுரத்துடன் படுத்திருக்கக் கண்டு அவனைத் தூக்கி எடுத்துத் தனது ஊர் கொண்டுபோய்ச் சேர்த்தார். வீடு சென்றதும் விக்றரின்வியாதி அதிகப்பட்டதே தவிர அற்பமும் குறையவில்லை. ஓர்நாள் நடுச்சாமத்தில் நோயாளி உரத்த சப்தமாய்க் கத்துவதைக் கேட்ட தாய்தந்தையர் எழுந்து போய் அவன் கட்டிலின் பக்கமாக நின்று என்னவென்று கேட்டனர். விக்றர் யாதொருபதிலும் சொல்லாமல் முன்போலவே கத்தினான்.

உடனே குருவானவரை அழைத்து வந்து அவனுக்குக் கடைசித் தேவதிரவிய அநுமானங்களைக் கொடுப்பிக்கத் தீர்மானித்தனர். ஆனால், பாவசங்கீர்த்தனம் செய்ய அவனுக்கு இஷ்டமில்லை. குருவானவர் எவ்வளவு அன்பாய்ப் பேசியும் பிரயோசனமில்லை. "யேசுவின் திருஇருதயம் பாவிகளை நேசிக்கும் இருதயம்; எவ்வளவு பெரிய பாவங்களைச் செய்திருந்தாலும் மனஸ்தாபப்பட்டு மன்னிப்புக் கேட்கிறவர்களுக்கு மகா இரக்கத்துடன் மன்னிப்பு அளிப்பார் திவ்வியயேசு" என்று சுவாமியார் எவ்வளவு சொல்லிப்பார்த்தும் அவன் கேட்கவில்லை. கடைசியாக நோயாளி திடீரெனத் தன்தலையை நிமிர்த்திக் குருவானவரைப் பார்த்து மிகப்பயங்கரமான குரலில், "என்னைக் கெடுத்த லூயிஸ் சபிக்கப்படுவான்! என் ஆத்துமத்தைக் கொலைசெய்த படுபாவிக்குச் சாபம்! எண்ணில்லாத பாவங்களைத் துணிந்து செய்த எனக்கு இனிமேல் மன்னிப்புக் கிடையாது; என்னை விழுங்க இதோ நரகம் வாயைத் திறந்து கொண்டு இருக்கிறது" என்று சொல்லிக்கொண்டே தன் படுக்கையில் வீழ்ந்து செத்தான். ஆபத்தைத் தேடிப்போன விக்றர் ஆபத்திலே மடிந்தான்.

ஜெறல்ட் நேல்சன்,
கத்தோலிக்ககலவன் பாடசாலை,
முன்னக்கரை.

> செபமாலை செபிக்கும் சேனை ஒன்றை நமக்குக் கொடுங்கள்; நாம் உலகத்தையேவெற்றிகொள்வோம்.
>
> — 11-ம் பத்திநாத பாப்பானவர்.

## பன்னிரு வினாக்கள்

(1) பாப்புமார்களிலே ஆகாயப்பிரயாணஞ்செய்தவர்கள் எவராவது உண்டா?

(2) காப்பி, தேயிலை, றப்பர், கொக்கோவா ஆகியவற்றில் முந்தமுந்த இலங்கையில் முதன்மைவகித்து அதற்குச் செல்வச்சிறப்பைக் கொண்டுவந்தது எது?

(3) காப்பிச்செடியின் காலம்போக அதனிடமாக இலங்கைக்குச் செல்வச் சிறப்பைக் கொண்டுவருவது யாது?

(4) தேயிலைச்செய்கை இலங்கையிலே எப்போது ஆரம்பமாயிற்று.

(5) உலகின் மகாவிலையேறப்பெற்ற தபால்முத்திரை எது? அதன் பெறுமதிஎன்ன?

(6) அமெரிக்க ஐக்கியதேச குடிசனங்களில் நிகிறோவர்எனப்படும் காப்பிரிச்சாதியினர் என்னவிகிதம் இருக்கின்றனர்?

(7) அமெரிக்க காப்பிரிச்சாதியினருள் எவராவது கவர்னராக நியமனஞ் செய்யப்பட்டிருக்கின்றனரா?

(8) உலகசரித்திரத்திலேயே மகாவிலையேறப்பெற்ற நாலுசக்கர வண்டியைப்பற்றிய சம்பவம் யாது?

(9) மிகநீண்டதாடி வளர்த்து உலகப்பிரசித்தி பெற்றவர் யார்?

(10) உலகின் அதிகம்பழைய மெழுகுவர்த்தி எங்கேஇருக்கின்றது?

(11) கிறிஸ்மஸ்விழாவைக் கொண்டாடிய முதலாவது அரசர் யார்?

(12) உலகிலேயே முதன்முதலாக அச்சிடப்பெற்ற புத்தகம் யாது?

(இந்த வினாக்களுக்கு விடைகள் தெரிந்தால் அடுத்தபக்கத்தில் காணப்படும் விடைகளை அவற்றுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பலி

பூசையில் பரமண்டல மந்திரஞ் செபித்தபின் குருவானவர் திருஅப்பத்தைப் பிட்கிறார். முதல் அதை இரு துண்டுகளாகப் பிரிக்கிறார். ஒருதுண்டைப் பீடத்தில் வைத்துவிட்டு, மற்றத்துண்டை இடதுகரத்தி லேந்திப் பாத்திரத்தின்மேல் பிடித்துக்கொண்டு அதில் ஒருசிறுதுண்டைப் பிட்கிறார்.

அச்சிறுதுண்டைப் பாத்திரத்தின் மேல் பிடித்து மூன்றுமுறை சிலுவை யடையாள மிடுகிறார். பின்பு அதைப் பாத்திரத்துள் விழவிட்டு, சற்பிரசாதம் உட்கொள்ள விருக்கிறவர்கள் மோட்சத்தில் நித்தியசீவியம் அடைவார்களென்று செபிக்கிறார்.

இதைப்பற்றி ஆண்டவர்சொன்னது உங்களுக்குஞாபகமிருக்கிறதா? "என்னுடைய சரீரத்தைப் புசித்து, இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் நித்திய சீவியத்தைக் கொண்டிருக்கிறான்; கடைசிநாளிலே அவனை (உயிர்த்து) எழுந்திருக்கச் செய்வேன்."

இது யேசுகொடுக்கும் வாக்கு. அடிக்கடியும், நல்லாயத்தத்தோடும் நீங்கள் திவ்வியநற்கருணை உட்கொண்டால், நீங்கள் மோட்சம் போவீர்கள். உலக முடிவில்உங்கள்சரீரமும் திரும்ப உயிர் பெறும். உத்தானத்திலன்று யேசுவின்சரீரம் இருந்ததுபோல நற்கருணையினுல் உங்கள்சரீரமும் மகிமை நிறைந்திருக்கும்.

பூசையில்இக்கிருத்தியம் "கலப்பு", எனப்படும். அது கிறீஸ்துவின் உத்தானத்தை எமக்கு நினைவூட்டுகிறது. அவர் சிலுவையில் மரித்தபொழுது ஆத்துமஞ் சரீரத்தைவிட்டுப் பிரிந்தது. மூன்றுநாட்களின்பின் அவைகள் திரும்பவும் ஒன்ருகின.

ஒருநாள் எங்கள் ஆத்துமமும் சரீரத்தைவிட்டுப் பிரியும். அது நாம் மரிக்கும்போது. இன்னொருநாள் உலகமுடிவின்போது பிரிந்தஆத்துமம் உடலுடன் சேர்ந்துகொள்ளும். உடல் திரும்பவும் உயிர்பெறும். எங்கள் உத்தானம் மகிமையும், சந்தோஷமும் நிறைந்தா யிருக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுவோம்.

திருஅப்பத்தில் பிட்கப்பட்ட இருதுண்டுகள் பீடத்திலிருக்கின்றன. குருவானவர் அவைகளை நோக்கித் தலைகுனிந்து, மும்முறை மார்பில்அறைந்துகொண்டு, "உலகத்தின் பாவங்களைப் போக்குகிற தேவ செம்மறிப்புருவையே, எங்கள்பேரில் இரக்கமாயிரும்" என்கிறார். மூன்றும்முறை "இரக்கமாயிரும்" என்பதற்குப்பதிலாக "எங்களுக்குச் சமாதானத்தைத் தந்தருளும்" என்கிறார்.

யேசுவைத் தேவசெம்மறிப்புருவை என்று முதல்அழைத்தவர் அர்ச். ஸ்நாபக அருளப்பர். என்ன அழகான பெயர்! தேவசெம்மறி என்கிறோம். ஏனெனில், அவர் எமது பாவங்களுக்காக உயிர்விட்டார்.

நாம் பாவிகளானபடியால் எமது பேரில் இரங்கும்படி கேட்கிறோம். ஆகையால்தான் குருவானவர் நெஞ்சில் தட்டுகிறார். இது மனஸ்தாபத்தின் அடையாளம். கடைசிமுறையாய் அதைச்சொல்லும்போது இறுதிவாக்கியங்களை மாற்றி "எங்களுக்குச் சமாதானத்தைத் தந்தருளும்" என்கிறார். சர்வேசுரனுடன் உறவை விரும்புகிறோம். இது அவர் எமதுபாவங்களை மன்னிக்கும்பொழுது கிடைக்கும்.

பூசையினுல் எமது சாவானபாவம் நீங்காது. பச்சாத்தாபந்தான் அதை நீக்கும். ஆனல், பூசையினுல் அற்பபாவம் நீங்கும். பாவத்துக்குரிய அநித்திய தண்டனையும் நீங்கும்.

அல்லாமலும், இத்திருப்பலியின் மூலம் சர்வவல்லப சர்வேசுரனிடமிருந்து அநேகவரங்களை அடைகிறோம். அர்ச்சிக்கும் அருள் ஆத்துமத்தில் அதிகரிக்கிறது எங்கள் புத்தியைத் தெளிவித்து, சித்தத்தைத் திடப்படுத்தி நன்மையைச் செய்யவும், தீமையை விலக்கவும் ஒத்தாசை அருள் கிடைக்கிறது.

## குறிப்பு

ஆட்சேபனை—நற்கிருத்தியங்களுக்குச் சம்பாவனையாக நாம் நித்தியவாழ்வைப் பேறாய் அடையலாமென்று நமதுவிசுவாசம் படிப்பிக்கிறது. அப்படியாயின் நித்தியசீவியம் வரப்பிரசாதம்—அதாவது இலவசமானகொடையென்று அப்போஸ்தலர் சொல்வதேன்? சம்பாவனை (சம்பளம்) உரிமை பாராட்டத்தக்கது; வரமோ அதன் தன்மையிலே இலவசமானது.

சமாதானம்—நித்தியவாழ்வு சம்பாவனையாயிருந்தாலும், அப்போஸ்தலர்அதை இலவசமான கொடையென்று கூறுவதற்கு இடமுண்டு. ஏனெனில், பேரின்பவாழ்வைச் சம்பளமாகப் பெறும்முயற்சிக்கு (நற்கிருத்தியங்கள்) வரப்பிரசாதம் காரணமாகின்றது. ஆகையால்தான் "எமது நற்கிருத்தியங்களுக்குச் சம்பாவனை அளிக்கும்பொழுது தமதுவரத்தையே சன்மானிக்கிறார்" என்று அர்ச். அகுஸ்தீன் கூறுகிறார்.

மேலும் நித்தியவாழ்வை ஒரு "கொடை" என்று இவ்விடத்திற கூறவே ஒருநியாயமுண்டு. பாவத்தின் தன்மையின்நிமித்தம் மரணம் அதற்குச் சம்பளம் ஆகிறதுபோல, நற்கிருத்தியங்களுக்கு மோட்சம் சம்பாவனையாகிறதில்லை. எமது கிருத்தியங்கள் நற்கிருத்தியங்கள் என்றமட்டிலே மோட்ச சம்பாவனைக் குரியவையல்ல; சர்வேசுரன் மோட்சத்தைச் சம்பாவனையாகத்தர வாக்குப்பண்ணினதினிமித்தமேயாம். ஆகையால், சர்வேசுரனுடைய வாக்கின்நிமித்தம் நித்திய சீவியத்தை எதிர்பார்க்கிறோமே யல்லாமல, எமது நற்கிருத்தியங்களுக்குரிய நீதியான சம்பாவனையின் நிமித்தமல்ல.

## பெந்தெக்கோஸ்துவின் பின் 7-ம் ஞாயிறு

### நிருபம், உரோ. 6 : 19—23

உரோமர் (புதுக்கிறீஸ்தவர்கள்) நீதியின் ஊழியரானபடியால் பரிசுத்தசீவியத்தை வளம்பெறச் செய்வது கடமையென்று காட்டியபின், எவ்வளவுதூரம் அவர்கள் முயற்சிசெய்ய வேண்டுமென்று கூறுகிறார் அர்ச். சின்னப்பர்.

"மனிதர் பேசும்பாவனையாய் இதைச் சொல்லுகிறேன்" என்கிறார். அதாவது, அவர் சொல்லுகிற கட்டளை தேவ உதவியுடன் மனிதபலத்துக்கு மேற்பட்டதல்ல என்கிறார். அசுத்த சீவியத்தினிமித்தம் அவர்கள் "மாமிசப் பெலவீன" ராயினும் நீதிக்கு (அதாவது பரிசுத்தத்திற்கு) ஊழியஞ் செய்ய மாட்டாதவர்கள் அல்ல.

இந்த இலகுவான கட்டளையை எப்படி அனுசரிப்பார்களென்றால் பாவத்துடன் எவ்வித தொந்தபந்தத்தையும் அழித்துப்போட வேண்டும். முன் அசுத்தசீவியத்திற் சீவித்தபொழுது நீதியை எப்படிப் புறக்கணித்தார்களோ அப்படியே இப்பொழுது அசுத்தத்தைக் கடைக்கணிக்க வேண்டும்.

இதில் அவர்களுக்கு ஊக்கம் எப்படிக் கொடுக்கிறார்? இருவித ஊழியத்தின் பலனைக் காட்டுகிறார். நீதியின் பலன் வெட்கம்அல்ல, நாம் மகிமை பாராட்டக்கூடிய பரிசுத்தம். அதன் முடிவு மரணம்அல்ல, முடிவில்லாத பேரின்பம்.

"சம்பளம்" என்ற பதத்திற்குக் கிரேக்கமொழியின் நிறைந்தகருத்து. போர்ச்சேவகருக்குக் கொடுக்கும் படி, வரப்பிரசாதமோ ஒரு கொடை. கிரேக்க மொழியின்படி சேனைத் தலைவர் தமது சேவகருக்குச் சம்பளத்திற்குமேல் கொடுக்கும் இனுமான கோடை. இரண்டையும் ஒப்புநோக்குதல் சர்வேசுரனுடைய தாராளதயவை வெளிப்படுத்தும்.

—சர்வேசுரனுக்குத் தோத்திரம்

## பன்னிரு விடைகள்

(1) ஆம் உண்டு. தற்போதுதிருச்சபையை ஆண்டுவருகிறவரான பன்னிரண்டாம் பத்திநாதபாப்பரசரே ஆகாய விமானங்களில் பிரயாணஞ்செய்த ஒரேயொரு பாப்பானவர். இவர்ஜேர்மனியிலே பாப்பரசின்ஸ்தானிகராய் இருந்தபோது அநேகமுறை ஆகாயப்பிரயாணம் நடத்தியிருக்கின்றார். இவர் பாப்பரசின் இராச்சியமந்திரியாய் இருந்தபோது அமெரிக்க ஐக்கியதேசத்தில் ஆகாயப்பிரயாணஞ் செய்திருக்கின்றார்.

(2) காப்பியே. ஆனல், இது பிந்த ஓர் நோய்கண்டு பரிநாசமாயிற்று. அப்போது இலங்கையிலே பல்லாயிரக் கணக்கான ஏக்கர்நிலத்தில் காப்பிச்செடி பயிர்செய்யப்பட்டிருந்தது.

(3) தேயிலையே.

(4) 1839-ம் ஆண்டு ஆரம்பமாயிற்று. அவ்வாண்டின் மார்கழிமாதத்திலேயே அது இந்தியாவிலிருந்து இலங்கையில் முந்தமுந்தப் புகுத்தப்படலாயிற்று. டக்றர்வாலிச்என்பவர் அப்போதே புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட அசாம் தேயிலைவிதைகளைப் பேராதனைத்தோட்டத்துக்கு அனுப்பிவைத்தார். பின்னரும் அடுத்தவருடம் அவரால் 200 தேயிலைச்செடிகள் அனுப்பிவைக்கப்படலாயின.

(5) 1856-ம் ஆண்டு பாவனைக்கு விடுக்கப்பட்ட நான்குசதம்பெறுமதியான பிரித்தானிய கயனுவின் தபால் முத்திரையே. இதில் ஒன்றேயொன்று தான் தற்போது இருக்கின்றது. இதன் பெறுமதி ஏறக்குறையப் பதினுயிரம் பவுணுகும்.

(6) நூற்றுக்குப் பத்திலும் சற்றே கூடியவிகிதமாய் இருக்கின்றனர்.

(7) ஆம், ஆர்ச்சியால்ட் அலெக்சான்டர்என்பவர் அத்தேச செனற்சபையின் அங்கீகாரத்துடன் ஜனதிபதி ஐஸன்ஹாவர் அவர்களால் வேர்ஜின் தீவுகளின் கவர்னராக நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார். இவர் பட்டதாரியான ஓர்எஞ்ஜினியராவர்.

(8) ஜேர்மனியின் 3-வது ஹென்றி சக்கரவர்த்தி (1017—1056) கொஞ்சம் இத்தாலிய வின்னரி அனுப்பிவைக்கும்படியாய் லுக்காவின் டியூக் பொனிப்பாஸியோ கோமகனைக் கேட்டிருந்தார். அதன்பேரிலே சுத்த வெள்ளியாற்செய்த நாலுசக்கரவண்டி ஒன்றிலே இத்தாலிய வின்னரி அந்தச் சக்கரவர்த்திக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அம்மட்டா! இந்தவண்டியிலே சுத்த வெள்ளியாற்செய்த முழுஉயரமுள்ள இருஎருதுகள் பூட்டப்பட்டிருந்தன. இது போய்ச்சேர்ந்ததும் சுத்தவெள்ளியாற்செய்த பீப்பாவொன்றில் இரண்டுகுவாட் வின்னரிமாத்திரமே இருக்கக்கண்டார் சக்கரவர்த்தி (1046).

(9) பெல்ஜியதேச அன்றவேப்நகரில் வசித்திருந்த எம். ஜூல்ஸ் டுமொண்ற் என்பவரே. இவர் 12 அடி நீளமான தாடி வளர்த்திருந்தார். அதாவது, அவரின் உயரத்தைப்போல் அவருடையதாடி ஏறக்குறைய நாலுமடங்கு நீளமானது. இருபெரிய மலைப்பாம்புகளைப்போன்று அவரது நாடியிலிருந்து அவருடையதாடி இருகத்தைகளாகப்பிரிந்து நிலத்தில் வெகுதூரம் இழுபட்டுக்கொண்டிருந்தது.

(10) பிரான்ஸ்தேசத்திலே அருஸ் நகர் ஆசனக்கோவிலில் இருக்கின்றது. அதாவது 1105-ம் ஆண்டுமுதல் கடந்த 849 ஆண்டுகளாக அதேயிடத்தில் தானே அதுஇடம்பெயராமல் இருந்துவருகிறது.

(11) பிறேவியஸ் ஜூலியஸ் கொன்ஸ்தாந்தியுஸ் சக்கரவர்த்தியே (317—361). கி. பி. 353-ம் ஆண்டு மார்கழிமாதம் 25-ந் திகதி நடைபெற்ற இக்கொண்டாட்டமானது அரசாங்கம் கிறீஸ்துவேதத்தை அதிகாரபூர்வமாக அங்கீகரித்ததைக் குறிப்பதாயிற்று.

(12) 'பைபிள்'என அறியப்படுகின்ற சுவிசேஷமே. திரு. ஹோஹன் குட்டென்பேர்க்கினும் ஓர்கத்தோலிக்கரே இதை அச்சிடலாயினர்.

## அடையாளம்

அமெரிக்கஐக்கியதேச மாலுமிஒருவன் பிலிப்பைன்தீவில் வேலையாயிருந்தான். ஒருசனிக்கிழமை மாலைநேரம் லூசோனின் கீழ்க்கரையிலிருந்த அந்திமொனு பட்டணத்தைப் பார்க்கப்போனுன்.

அடுத்தநாள் ஐந்தரை மணிக்குப் பூசைக்கென்று எழுந்தான். "கும்" என்ற இருட்டு. சந்தையடியில் அவ்வூரவன் ஒருவன் எரிகின்ற விளக்கடியில் படுத்திருந்தான். கோயிலுக்குப் போகும்வழி ஏதென்று ஆங்கிலத்திலும், கொச்சையான ஸ்பானிய பாஷையிலும் மாலுமி அவனைக்கேட்டான். அவ்வூரவன் தெரியாதென்று மறுமொழி கூறினுன். மாலுமி தன்மேல் சிலுவையடையாள மிட்டான். ஊரவனுக்குப் புரிந்தது.

தன்பிறகே வரும்படி சைக்கினை காட்டி, ஒருமடத்து வாசலுக்குக் கூட்டிப்போனுன். அங்கிருந்த கன்னியாஸ்திரி சுத்தஇங்கிலீஷில் பேசி அருகிருந்த பங்குக்கோவிலைக் காட்டினுள்.

## நெடுந்தீவு மரண அறிக்கை

நெடுந்தீவு உதயபதிவாசரும், கந்தப்பு முதலிவழித்தோன்றலும், நடுக்குறிச்சி ஆண்பாடசாலைத் தலைமைஆசிரியருமான திரு. கே. ரீ. ஞானப்பிரகாசம்அவர்களின் அருமைத்தாயார் திருமதி மேரிஏஞ்சல் இளையபிள்ளை விருத்தாப்பியநோய்கண்டு தனது75-ம் பராயத்தில் கடந்த 24-6-55-ந் திகதி காலஞ்செல்லலாயினுர். இவர்வேதக் கடமைகளைச் சுமுத்திரையாய் அநுசரித்தவர். வீட்டிற்கோர் விடிவிளக்குப் போல் மிளிர்ந்து யாவராலும் அன்பாய் நேசிக்கப்பட்டவர். மறுநாட்காலை சங். கன்னியர், பல்வேறுபக்திக்கூட்டங்களைச் சேர்ந்தவர்கள், பாடசாலைப் பிள்ளைகள், ஆசிரியர்கள், மற்றும்பலரும் சமுகமளித்துக் கூட்டங்கூட்டமாய்ச் செபங்கள்ஓதிநின்றனர். பி. ப. 4 மணிக்கு வண. எஸ். ஏ. சுவாம்பிள்ளைச்சுவாமியவர்கள் அந்திம திருச்சடங்குகளை நிறைவேற்றிக் காலஞ்சென்றவரின் வேதஒழுங்கு, நன்முன்மாதிரி என்பனகுறித்து உருக்கமான சொற்பொழிவொன்று ஆற்றினர். சகல பக்திக்கூட்டங்களையுஞ் சேர்ந்தவர்கள் முன்செல்ல, பெருந்திரளான இனசனர், சிநேகிதர் பின்செல்ல, சுவாமியவர்கள் துக்கசங்கீதம்பாடி, அர்ச். சவேரியாரின்ஆலயம் போந்து, அந்திம திருச்சடங்குகள் நிறைவேற்றியதும் பிரேதம் சேமக்காலை கொண்டுசென்று நவமாகஅமைக்கப்பட்ட கல்லறையில் நல்லடக்கஞ் செய்யப் படலாயிற்று. இவரை இழந்துதுன்புறும் ஏகமகன், சகோதரி, மருமகள், பேரப்பிள்ளைகள், மற்றுமுள்ளஇனசனர் முதலானவர்களுடன் நாமும் அனுதாபப்படுகிறோம்.

**R. I. P.** —நிருபர்.

## வித்தியாதரிசிக்குப் பிரியாவிடை

நம்பகுதி வித்தியாதரிசகராகக் கடமைபார்த்துவந்த திரு. ஈ. சி. பொன்னுத்துரையவர்கட்கு நெடுந்தீவு அரசினர்பாடசாலைமைதானத்தில் ஓர்பிரியாவிடைவைபவம் நிகழ்த்தப்பட்டது. பாடசாலைஅதிபர் திரு. ஈ. வை. இரத்தினசிங்கியவர்கள் தலைமைதாங்கினர். தோட்டோபசாரனை பரிமளிப்பாய் நடந்தேறியது. ஆசிரியர்களும், நம் தீவின் பிரபலஅதிகாரிகளும் சமுகங் கொடுத்திருந்தனர். வித்தியாதரிசியவர்களின் உத்தமசேவையைக் குறித்துத் திரு. கே. கணபதிள்ளை,பிப் திரு. கே. ரீ. ஞானப்பிரகாசம் முதலிய ஆசிரியர்கள் சொற்பெருக்காற்றினர். பிரியாவிடைநாயகர் யாவர்க்கும் தமதுமனமார்ந்த நன்றியைத்தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## GOVT. TENDERS

Jaffna Kachcheri

N1958—Sale of the exclusive privilege of selling Arrack in the Arrack Taverns of the Jaffna Dist. for the rent year 1955/56 close at 10 a.m. on 15-8-55. For Particulars see Part I, Section II. Govt. Gazette, 15-7-55.

## வலித்தூண்டல் (கீரிமலை)

**ஆண்டவர்அன்னையின் தாயார்திருநாள் ஆடிக் கடைசிநாள் வருகிறது. வாரீர் நேயர் யாவரும் பக்தியாய்ப் பணிய, யேசுவின்பாட்டியார் ஆசியைஅடைய.**

கட்டளைக்குரவர் (இளவாலை)

## கத்தோலிக்க ஆசிரியைகளின் வருடாந்த ஞானஒடுக்கம்

### 7-8-55 — 11-8-55

கத்தோலிக்க ஆசிரியைகளின் வருடாந்த ஞான ஒடுக்கமானது இம்முறை ஆவணிமாசம் 7-ந்திகதி சாயந்தரம் இளவாலைகன்னியர் தாபனத்தின் கண்ணே வழமைபோல ஆரம்பமாகும். ஆசிரியைகளின் வசதிகோரி ஆவணி மாசத்திற்குப் பின்போட்டுநடத்துவதால் அநேகஆசிரியைகள் சமுகமளித்து நயனடைய வசதியளிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால், தக்கஇத்தருணத்தைக் கைவிடாது ஞானஒடுக்கத்தில் பங்குபற்றுமாறு எல்லோரும் அன்புடன் அழைக்கப்படுகிறீர்கள். பங்குபற்றுவோர் தாபனத்தலைவியவர்கட்கு அறிவிக்கும்படி தயவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

Revd. Mother Superior,
Holy Family Convent,
Ilavalai.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

திவ்விய பூசைப்பலியின் பெறுபேறுகளினலும், சதாசகாய மாதாவினதும், அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார் இவர்களின் அனுக்கிரகத்தினலும் நான் இரந்துகேட்ட ஒரு காத்திரமான கருமம் நிறைவேறியது. இவர்களின் நாமங்கள் புகழப்படுவதாக! நான் நேர்ந்துகொண்டபடி நன்றியாக இதனைப் பிரசுரிக்கிறேன்.

மணற்சேனை ஊசியா சில்வா

## மட்டக்களப்பு தாண்டவன் வெளித்தபால்

### மூன்றும்முறை அரங்கேற்றம்

தாண்டவன்வெளி, பரிசுத்தஅமலோற்பவமாதா பக்திச்சபைச் சிறுமிகளால் "யாமினி" அல்லது "கற்பின் மகிமை" என்னும் நாடகம் இரண்டுமுறை மட்டக்களப்பில் அரங்கேற்றப்பட்டுப் பெரும்புகழ் ஈட்டியமையால் 3-7-55 ஞாயிற்றுக்கிழமை திரிகோணமலை அர்ச். சூசையப்பர்கல்லூரி மண்டபத்தில் பட்டினசபைத்தலைவர் திரு. ரி. ஏகாம்பரம்அவர்கள் தலைமையிலே மூன்றுமமுறையாக அரங்கேற்றப்பட்டது. முந்திய முறைகளிலும்பார்க்க இம்முறை அதிகம்சிறப்பாய் இருந்தது. நாடகத்தின் நடுப்பகுதியில் தாண்டவன் வெளிக் கட்டளைக்குரவர் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக்சுவாமியவர்கள் தலைவருக்கும், நாடகத்துக்குச் சமூகமீந்த அன்பர்கள் அனைவருக்கும் நன்றிகூறினர். திரு. ரி. ஏகாம்பரம் அவர்கள் தம்மைத் தலைமைதாங்கும்படி கேட்டுக்கொண்டதற்காக நன்றி தெரிவித்தார்.

### திவ்வியநற்கருணைச் சுற்றுப்பிரகாரம்

மட்டக்களப்புத் தாண்டவன்வெளிப் பரிசுத்த வியாகுலமாதாகோவிலில் இம்மாதம் 10-ந்திகதி ஞாயிறுவாரம் முழுநாளும் திவ்வியநற்கருணை எழுந்தேற்றஞ்செய்து வைக்கப்பட்டு ஆராதனைநடந்தது. பி. ப. 5 மணிக்குக் கோவிலைச்சுற்றிவரப் பாடசாலைமாணவர் மாணவிகளாலும், பங்குவிசாரணைச் சங்கத்தினராலும் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்த பாதைவழியே பாடசாலை மாணவர்மாணவிகளும், பக்திச்சபைக் கூட்டங்களைச் சேர்ந்தவர்களும், அர்ச். சூசையப்பர்சபைச் சந்நியாசர்களும், கார்மேல்சபைக் கன்னியர்களும், வறியோரின் சிறியசகோதரிகளும, மற்றும் பங்குக்கிறீஸ்தவர்களும் அணிவகுத்துச்செல்ல, கட்டளைக்குரவர் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக்சுவாமியவர்களால் திவ்வியசற்பிரசாத கதிர்ப்பாத்திரம் கொண்டுசெல்லப் பட்டதைக் கண்டவர்கள்எவர்தான் பக்திப்பரவசமடையாதிருக்கமுடியும்? சுற்றுப்பிரகாரமுடிவில் "தெதேயும்" என்ற தோத்திரகீதம்பாடி அருளப்பெற்ற நற்கருணை ஆசீர்வாதத்துடன் யாவும் முடிவுற்றது.

—நிருபர்.

## JUNIOR SCHOOL CERTIFICATE

**ENGLISH AND TAMIL EXAMINATIONS, NOVEMBER, 1955.**

*(Conducted by the Examination Council of the Northern Province Teachers' Association)*

Closing date for entries of School Candidates:—
**25th September, 1955.**

Closing date for entries of Private Candidates:—
**1st August, 1955.**

Apply for entry forms to:—A. R. Rajanayagam, Secretary, N.P.T.A. Examination Council, 655, K.K.S. Road, Jaffna.

The Examination Council for 1955—1956, was elected with the following office-bearers:—

President: Mr. K. Pooranampillai, Principal, Hartley College, Point Pedro.
Secretary: Mr. A. R. Rajanayagam, Hindu College, Kokuvil.
Asst. Secretary: Mr. J. T. Chelliah, St. John's College, Jaffna.

Principals and others interested are requested to forward suggestions re syllabus and text books for 1956 before 22-7-'55.

பத்திரிகை உலகின் முன்னணியில்

## தென் ஒலி

இலக்கிய மறுமலர்ச்சி செறிந்த மாத வெளியீடு
மாதமொரு அட்டைப்படம்
கருத்துறை கட்டுரைகள், களிப்பூட்டும் கதைகள்
பக்தி வளர்க்கும் பாட்டுகள்
உள்ளத்தை அள்ளும் ஓவியங்கள்

**பக்கம் - 40 — ஆண்டுக்கு (இலங்கைக்கு வி. பி. பி. மூலம்) ரூ. 1-85**

தேவைப்படுவோர்க்கு மாதிரிப் பிரதியொன்று இலவசமாய் அனுப்பப்படும்.

அஸிஸி அச்சகம், நாகர்கோவில், இந்தியா.

வெளிவந்துள்ளது!

**எட்டாம் வகுப்புக்குரிய மாணவர் பூமிசாஸ்திரம்**

முன்னர் வெளிவந்துள்ள 'மாணவர் பூமிசாஸ்திரம்' எனும் நூல்களைத் தொடர்ந்து எட்டாம் வகுப்புக்குரிய மாணவர் பூமிசாஸ்திரம் புதிதாக வெளிவந்துள்ளது. இந்நூலில் **இலங்கையும், ஆசியாவும்** விரிவாகவும் விளக்கமாகவும் எழுதப்பட்டுள்ளது. எட்டாம்வகுப்பு மாணவருக்கு இது இன்றியமையாத ஒரு நூலாகும்.

**விலை ரூபா 2-50**

அர்ச். பிலோமினு அச்சகம்,
102, பெரியதெரு, யாழ்ப்பாணம்.

## விளையாட்டுப் போட்டிகள்

கலாசாலைகள், கல்லூரிகள் நடத்திவருகின்ற விளையாட்டுப்போட்டிகள் அதிகம்பிந்தியநேரமாய் மாலை 5-30 மணிக்குமுன்னரே முடிவடைய வேண்டுமெனத் தெரிவித்து வித்தியாதிபதிஅவர்கள் அவைகளுக்கெல்லாம் ஓர் சுற்றறிக்கை விடுத்திருக்கின்றார். சில பாடசாலைகளின் விளையாட்டுப்போட்டிகள் அதிகம்பிந்திய நேரம்வரை தொடர்ந்துநடைபெற்று, அதனால் அவற்றிற் கலந்துகொள்ளும் பிள்ளைகள் —விசேஷமாகப் பெண்பிள்ளைகள் தங்கள்வீடுகளுக்குத் திரும்புவதில் பெரிதும்வசதியீனம் ஏற்படுவதே இந்நடவடிக்கை எடுக்கப்படக் காரணமாகும்.

## அர்ச். மரியகோறெற்றியின் திருநாள்

ஆடி பிறந்தால் எம்மனைவர்க்கும் அணைகடந்த ஆனந்தம். ஏன்? அலெக்சான்டர்என்ற வாலிபனின் கையினல் பதினன்கு கத்திக்குத்துகளைப் பராக்கிரமத்துடன் ஏற்றுப் பரிசுத்த கற்பினைப் பழுதறக்காத்துப் பரலோகம்பறந்துசென்ற பன்னிருபிராயப்பாலியவேதசாட்சியாம் அர்ச். மரியகொறெற்றியின் திருநாளை இந்தமாதம் அழைத்துவருவதேயாகும். இம்முறை இத்திருநாளை முன்னிலும் பன்மடங்கு பரிமளிப்பாய்க் கொண்டாடினேம். திரிதினஆராதனைகள் சிறப்புடன் நடந்தேறின. 9-ந் திகதி சனிவாரம் உதயமானது. செபமாலைநாயகியின் திருச்சிற்றாலயம் செந்நிறத்துவசங்களாலும், பன்னிறத்தீபங்களாலும், வெண்ணிறப் புஷ்பங்களாலும் சிங்காரிக்கப்பட்டிருந்தது. பரலோகம் நோக்கும் பாவனையாய்விளங்கிய பாலியவீராங்கனையின் திவ்வியபிரதிமைப்படம் பக்கப்பீடத்திலே மலர்களின்மத்தியில் மகிமையுடன் காட்சியளித்துப் பார்த்தோர் யாவரையும் பரவசப்படுத்தியது. 6-30 மணிக்கு வண. யோசெப்சுவாமியார் திருப்பலி பூசையை ஆரம்பித்தார். தேனினுமினிய ஞானகீதங்கள் இடையிடையே இன்பமாகப் படிக்கப்பட்டன. திரளான மாணவர், மாணவிகள் திவ்விய விருந்தருந்தினர். இத்திருநாளை வருடந்தோறும்கொண்டாட வழிகாட்டிப் போன வண. பிரான்சிஸ் குலாஸ்சுவாமியவர்கட்கு எங்கள்நன்றி என்றும் உரியதாகுக.

மேரி தெரேசா. பெர்,
குடாப்பாடு, த. க. பாடசாலை.

## Junior School Certificate Examination November, 1955.

*(Conducted by the Examination Council of the Northern Province Teachers' Association.)*

Closing date for entries of School Candidates:-
25th September, '55.

Closing date for entries of Private Candidates:-
1st August, '55.

Apply for entry forms to:-

A. R. Rajanayagam,
*Secretary.*
N.P.T.A. Examination Council,
655, K.K.S. Road, Jaffna.

## ஆங்கில, தமிழ் கனிஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திரப் பரீட்சைகள்

### — கார்த்திகை 1955 —

**N. P. T. A.**
**Junior School Certificate Examination November 1955**
(In English & Tamil)

வடமாகாண ஆசிரிய சங்கத்தினல் நடாத்தப்படும் இப்பரீட்சைக்குத் தோற்றவிரும்பும் பாடசாலை மாணவர்களிடமிருந்து 25-9-55க்கு முன்பதாகவும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளிடமிருந்து 1-8-55க்கு முன்பதாகவும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

விண்ணப்பப் பத்திரங்களைக் கீழ்க்காணும் விலாசத்திற்கெழுதிப் பெற்றுக் கொள்க.

A. R. இராசநாயகம்,
கௌரவகாரியதரிசி,
வ. ஆ. ச. பரீட்சைக்குழு,
655, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.

## தேவை

இளவாலை, ஐக்கிய பண்டகசாலைக்கு ஒரு மனேஜர் தேவை. விண்ணப்பம் செய்வோர் 300 ரூபா காசுப்பிணை கட்டக்கூடியவராகவும், ஆயிரம்ரூபா காணிப்பிணை சாட்டக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும். தமிழில் ஆழ்ந்தஞானமும் சித்தியடைந்திருப்பது விரும்பத்தக்கது. மாசம் 50 ரூபா சம்பளம் கொடுக்கப்படும். விரும்பியோர் காரியதரிசி, ஐக்கிய பண்டகசாலை, இளவாலை என்ற விலாசத்துக்கு 18-7-55-க்குமுன் விண்ணப்பம் செய்யவும்.

## அர்ச். வின்சென்ற் டி போல் சபை

### நுவரெலியா

அர்ச். வின்சென்ற் டி போல் சபையின் 25-வதுவருட வெள்ளிவிழா நுவரெலியா வின்சென்ற் டி போல் சபையாரால் கொண்டாடப்படும்.

#### நிகழ்ச்சிகள்

ஆடி 21-ந் திகதிமுதல் 23-ந் திகதிவரை முத்தின ஆராதனை.
23-ந் திகதி மாலை 4 மணிக்கு வறியவர்களுக்கு உதவிபுரிதல்.
24-ந் திகதி காலை 7 மணிப் பூசையில் சபைஅங்கத்தினர்கள் திவ்வியநன்மை உட்கொள்ளுதல்.

9 மணிக்குப் பாடற்பூசை. சாயந்தரம் 3-30 மணிக்குப் பிள்ளைகளின் பந்தயவிளையாட்டு. 4 மணிக்குப் புகைப்படமெடுத்தல். 4-30 மணிக்கு வருடாந்த பொதுக் கூட்டம். 5 மணியளவில் சிற்றுண்டி உபசரித்தல்.

**Paul Lazarus,**
சபைத்தலைவர்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, July 14-1955.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org